www.janasakthi.in
janasakthieditor@gmail.com
janasakthi Tholaikatchi
CPI Tamilnadu



நிறுவனர்: ப. ஜீவானந்தம்

புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வார இதழ்

மலர் 87 இதழ் 50 | 2025 மார்ச் 16 - மார்ச் 22 | 16 பக்கங்கள் | விலை: ரூ.15

## தமிழர்களையும் தமிழ்நாட்டையும் இழிவுபடுத்திப் பேசுவதா?

# தமிழ்நாடு அமைதி கொள்ளாது

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி எச்சரிக்கை!

**தமிழர்களையும், தமிழ்நாட்டையும் இழிவுபடுத்தித் தரம் தாழ்ந்து பேசிய ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய அரசின் புதிய தேசியக் கல்விக் கொள்கையை ஏற்க முடியாது என்று தமிழ்நாடு ஆரம்ப நிலையில் இருந்தே எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. ஒன்றிய அரசும், கல்வி அமைச்சகமும் புதுப்புதுத் திட்டங்களை அறிமுகப்படுத்தி ஏற்க வேண்டும் என நிர்பந்தித்து வருகிறது. இதன் தொடர்ச்சியாக பள்ளிக் கல்வித் துறைக்கு, சட்டபூர்வமாக வழங்க வேண்டிய நிதியை வழங்காமல் நிறுத்தி வைத்து, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குக் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றது.

இந்நிலையில் நாடாளுமன்ற மக்களவையில், தமிழ்நாடு உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விகளுக்குக் கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் முறையான பதிலளிக்காமல், தமிழர்களையும், தமிழ்நாட்டையும் இழிவுபடுத்தித் தரம் தாழ்ந்து பேசியிருக்கிறார். அவர் பல நேரங்களில் தமிழ் மக்களையும், தமிழ்நாட்டையும் சிறுமைப்படுத்தி வருகிறார்.





இந்தச் செயல் தொடருமானால் தமிழ்நாடு அமைதி கொள்ளாது என்பதை அவர் அறிந்து கொள்ள வேண்டும். அமைச்சரின் ஆணவப் பேச்சுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது என்று கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.




◆ தமிழ்நாட்டையும் தமிழர்களையும் இழிவுபடுத்திய ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை மன்னிப்பு கேட்க வலியுறுத்தியும், மும்மொழி கொள்கையை திணிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் நாடாளுமன்ற வளாகத்தில் தமிழ்நாட்டு எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## நாடாளுமன்ற அவை நடவடிக்கை அனைத்தும் 22 மொழிகளிலும் உடனடி நிகழ்நேர இரு வழி மொழிபெயர்ப்பு!

# கே.சுப்பராயன் எம்.பி.யின் இடைவிடாத முயற்சி வெற்றி

**நாடாளுமன்றத்தில் தற்போது எந்த மொழியில் பேசினாலும் உறுப்பினர்களுக்கு தெரிந்த மொழியில் அதற்கான மொழிபெயர்ப்பு உடனுக்குடன் கிடைக்கும் என்ற நிலை கே.சுப்பராயன் எம்பியின் தொடர் முயற்சியால் நிறைவேறியுள்ளது.**

கோவை நாடாளுமன்ற தொகுதியில் இருந்து, 2004ல் வெற்றி பெற்று, தோழர் கே சுப்பராயன் நாடாளுமன்றத்திற்குள் நுழைந்த போது, அங்கு ஆங்கிலம் அல்லது இந்தி ஆகிய இரு மொழிகளில் ஒன்றில்தான் பேசியாக வேண்டும்.

தமிழ் உள்பட தாய்மொழிகளில் பேச வேண்டும் என்றால், முன்னதாகவே தெரிவித்தால்தான் ஒரு மொழிபெயர்ப்பாளர் அமர்த்தப்பட்டு தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்ப்பார்.



இது நியாயமற்றது என்று தனது போராட்டத்தை அப்போதே தொடங்கினார் கே.சுப்பராயன்.

இரண்டாவது தடவையாக திருப்பூர் தொகுதியில் இருந்து 2019ல் தேர்வு செய்யப்பட்ட பின்பு, தனது போராட்டத்தை இன்னும் கூர்மையாக்கினார்.

2021 பிப்ரவரி 23ல் பிரதமர் மோடிக்கு, நாடாளுமன்றத்துக்குள் எந்த நேரத்திலும், அரசியல் சாசனத்தில் சேர்க்கப்பட்டுள்ள 22 மொழிகளில், எந்த மொழியில் வேண்டுமானாலும் பேசவும், அதேபோல எந்த மொழியில் பேசினாலும், அந்த 22 மொழிகளிலும் மொழிபெயர்க்கப் படவும், இரு வழித் தொடர்பை உருவாக்க வேண்டும் என்று கடிதம் எழுதினார்.

தொடர்ச்சி 8 ஆம் பக்கம்

### நாகை நோக்கி..!
**கட்சிக் கடிதம்**

இந்தியாவே நாகையில் கூட இருக்கின்றது. இந்திய மொழிகள் அனைத்தையும் கொண்ட மக்கள் மூன்று நாட்களும் ஒரு சேர கூட இருக்கின்றார்கள். வர்க்க ஒற்றுமையை மதம், சாதி, மொழிகள் பிளவுபடுத்திட முடியாது. ஆம்! நம் நாட்டின் விவசாய வர்க்கம் அணி திரள இருக்கின்றது.

... பக்கம் 2

### நாடு தழுவிய பரப்புரை
**பொதுச்செயலாளர் டி.ராஜா**

உலகளாவிய வலதுசாரி மாற்றம், இந்தியாவில் மட்டுமல்ல உலகம் முழுவதும் அமைதி, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை ஆபத்தில் தள்ளக்கூடிய ஏகாதிபத்திய போக்கு வலுவடைந்து வருவதை குறிக்கிறது. இவை உள்ளிட்ட பன்முக சவால்களை எதிர்கொள்ள, பகத்சிங் தூக்கிலிடப்பட்ட மார்ச் 23, 2025 முதல் அம்பேத்கரின் பிறந்தநாளான ஏப்ரல் 14, 2025 வரை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பரப்புரை மேற்கொள்ள இருக்கிறது.

... பக்கம் 3

### அமெரிக்காவுக்கு அடிமை சேவகம் செய்யவா இந்தியா?
**த.லெனின்**

டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளுக்கு எதிராக பல நாடுகள் குரல் கொடுத்துள்ளன. சீனா, கனடா ஆகிய நாடுகள் பதிலடி நடவடிக்கையாக அமெரிக்காவின் இறக்குமதிக்கு கூடுதல் வரிகளைத் தாங்களும் விதிக்கப் போவதாக அறிவித்துள்ளன. ஆனால் அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியை குறைப்பதற்கு இந்தியா முடிவெடுத்திருப்பது எதைக் காட்டுகிறது?

... பக்கம் 5

### தேசியக் கல்விக் கொள்கையைப் பின்பற்றாத ஒன்றிய அரசுப் பள்ளிகள்
**மே.து.ரா.**

மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்விக்கான நீட் உள்ளிட்ட நுழைவுத்தேர்வுகள் பலவும் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படுவதால்தான், சிபிஎஸ்இ போன்ற பள்ளிகளை பெற்றோர் தேர்ந்தெடுக்கின்றனர் என்கின்ற உண்மையை பாஜகவினர் மறைத்துவிடுகின்றனர்.

... பக்கம் 6

### டிரம்ப் - ஜெலன்ஸ்கி 'மோதல்' வெளிப்படுத்துவது என்ன?
**வ.மணிமாறன்**

இருநாட்டு அதிபர்கள் பேச்சு நடத்திய போது ஏற்பட்ட 'மோதல்' இருவேறு விருப்பங்களை வெளிப்படுத்துகிறது. இதில், அமெரிக்காவை எப்படியாவது போருக்குள் இழுத்துவிட வேண்டும் என்ற அவசர உணர்வை உக்ரைன் அதிபரும், மூன்றாம் உலகப் போருக்குள் தள்ளிவிடப் பார்க்கிறார் என்ற எரிச்சலை அமெரிக்க அதிபரும் வெளிப்படுத்தினர்.

... பக்கம் 10

கட்சிக் கடிதம்

# நாகை நோக்கி...



போர்க்குணமிக்க தோழர்களே!

**மரம் ஆடாமல், அசையாமல் இருக்க வேண்டும் என்றுதான் நினைக்கின்றது, விரும்புகின்றது.**

ஆனால், காற்று அதனை விடுவதாக இல்லை. காற்று மெல்லமாக, சில நேரங்களில் வேகமாக, சில நேரங்களில் மிக வேகமாக, இன்னும் சில சில நேரங்களில் மிக வேகமாக, இன்னும் சில சில நேரங்களில் புயலாக அது மாறி சுழன்று சுழன்று வீசுகின்றபோது மரத்தால் என்ன செய்ய முடியும்! அதுவும் ஆடித்தானே ஆகவேண்டும் அசைந்தாடித்தானே செய்யும்!

அதுபோன்று மகத்தான, புரட்சிகரமான இயக்கத்தில் இருக்கும் நாம், அமைதியாக இருக்கலாம். ஒய்வு எடுத்துக் கொள்ளலாம் என்று நாம் விரும்பினாலும் அரசியல் காற்று நம்மை அமைதியாக இருக்க அனுமதிக்காது.

நமது நாட்டில் நடந்துகொண்டிருக்கும் அரசியல் காற்று, குழந்தைகளைக் கூடப் போராட வைக்கின்றது.

மாணவர்களை, இளைஞர்களை, பெண்களை, முதியவர்களைக் கூடப் போராட வைக்கின்றது.

இந்தியா என்கிற பெரு நாட்டில் அன்று முப்பது கோடியாக இருந்தாலும் இன்று அது நூற்றி நாற்பது கோடியாக இருந்தாலும் இந்து, இஸ்லாம், கிறித்தவம், சீக்கியம், பவுத்தம் எனப் பல மதங்கள் இருந்தாலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாதிகள் இருந்தாலும் இவைகளில் பெரும்பான்மையான மக்கள் விவசாயம் சார்ந்த மக்கள் கிராமப் புற விவசாயப் பெருங்குடி மக்களே!

‘உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின்செல் பவர்.’ என வான் புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை போற்றிப் புகழ்ந்த பெருமக்கள் விவசாயிகள் ஆவர்.

அத்தகைய மக்கள் தங்களின் வாழ்வாதாரங்களுக்காக மட்டுமல்ல தங்களின் கோரிக்கைகளுக்காக மட்டுமல்ல, அதனுடன் சேர்ந்து நாட்டின் விடுதலையும் முக்கியமெனக் கருதி, அம்மக்களை அமைப்புரீதியாக அணிதிரட்டாமல் நாட்டின் விடுதலை பெற இயலாது எனக் கருதிய நமது முன்னோர்கள் அகில இந்திய அளவில் விவசாயிகள் சங்கத்தை 1936 ஆம் ஆண்டு, உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவில் தொடங்கினார்கள்.

ஜமீன்தார்களுக்கு எதிராக பீகார் மாகாணத்தில் விவசாயிகள் கண்ட புகழ்மிக்க தலைவர் சகஜானந்த சரஸ்வதி அவர்களைத் தலைவராகவும் என்.ஜி.ரங்கா அவர்களை பொதுச் செயலாளராகவும் கொண்ட அகில இந்திய விவசாயிகள் சங்கம் தொடங்கப் பெற்றது.

விடுதலைப் போர்க்களத்தில் மாவீரனாகத் திகழ்ந்த சுபாஸ் சந்திர போஸ் அவர்களின் மிக நெருங்கிய நண்பர் சகஜானந்த சரஸ்வதி என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் மட்டுமன்றிப் புகழ்மிக்கத் தலைவர்களான ஜெயப் பிரகாஷ் நாராயணன், ராம் மனோகர் லோகியா, இஸட் ஏ அகமது, ராகுல் சாங்கிருத்யாயன், சுந்தரய்யா போன்ற மகத்தான தலைவர்கள் உருவாக்கிச் செயல்பட்ட அமைப்பே நமது அகில இந்திய விவசாயிகள் சங்கம்.

ஜமீன்தார் முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். நிலச் சீர்த்திருத்தம் வேண்டும், உழுபவனுக்கு நிலம் சொந்தமாக்கப் பட வேண்டும், ஊரகக் கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும் என்ற முழக்கங்களுடன், நாடு விடுதலை பெற வேண்டும், வெள்ளையர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனச் சுதந்திர வேட்கையுடன் பிறந்ததுதான் நமது அகில இந்திய விவசாயிகள் சங்கம்.

அத்தகைய மகத்தான சங்கத்தின் அகில இந்திய 30வது மாநாடு தமிழ்நாட்டில், நாகப்பட்டினத்தில் வரும் ஆகஸ்ட் திங்கள் 15, 16, 17 ஆகிய மூன்று தினங்கள் சீரோடும் சிறப்போடும் நடைபெற உள்ளது.

நாடு முழுவதும், காஷ்மீர் முதல் குமரி வரை அனைத்து மாநிலங்களிலும் வட்டார, மாவட்ட, மாநில மாநாடு நடைபெற்று முடிந்து, அம்மாநாடுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட 700க்கும் மேற்பட்ட பிரதிநிதித் தோழர்கள் இம்மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர்.

தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, பஞ்சாபி, வங்கம், குஜராத்தி, ஒடியா, போஜ்புரி எனத் தங்களின் தாய்மொழியாகக் கொண்டவர்களோடு இந்தி பேசுபவர்களும் மாநாட்டில் கலந்து கொள்ள உள்ளார்கள்.

சுருங்கக் கூறின் இந்தியா, நாகையில் கூட இருக்கின்றது. மூன்று தினங்களும் இந்திய மொழிகள் அனைத்தையும் கொண்ட மக்கள் ஒரு சேர கூட இருக்கின்றார்கள். வர்க்க ஒற்றுமையை மதம், சாதி, மொழிகள் பிளவுபடுத்திட முடியாது.

ஆம்! நம் நாட்டின் விவசாய வர்க்கம் அணி திரள இருக்கின்றது. அத்தகையவர்கள் வெறும் விவசாயிகள் மட்டுமல்ல; களம் கண்டவர்கள்.

பொருளாதாரச் சுண்டலுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியவர்கள். தாங்கள் உற்பத்தி செய்யும் பொருளுக்கு விலை நிர்ணயம் வேண்டும் எனக் கோரி போராடி வருபவர்கள்.

இன்றல்ல, நம் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தி, நம் மக்களை அடிமையாக்கி கொடுங்கோல் ஆட்சி புரிந்த வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, ஊரான், ஊரான் தோட்டத்திலே, ஒருத்தன் போட்டான் வெள்ளரிக்கா, காசுக்கு ரெண்டு விற்கச் சொல்லி காகிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்” என்று அன்று முழங்கியவர்கள். இன்றும் அம்முழக்கம் நாடு முழுதும் எதிரொலித்துக் கொண்டுள்ளது.

நாடு முழுவதும் உள்ள விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், பட்டியல் இன மக்கள் மீது தொடுக்கப்பட்ட சமூக அடக்குமுறை கொடுமைகளுக்கு எதிராகக் களம் கொண்டு வெற்றி வாகை சூடிய பெருமக்களின் வழி வந்தவர்கள் சங்கமிக்கின்றார்கள் நாகையில்.

வற்றாத ஜீவ நதியாம் காவிரி, அதன் கிளை நதிகள் அனைத்தும் சங்கமிக்கும், வங்கக் கடல் கொண்ட நாகையில், நமது சங்கத்தின் அகில இந்திய மாநாடு.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தில், வெள்ளையர்களால் இயக்கப்பட்ட ஸ்டீல் ரோலிங் மில் தொழிலாளர்கள் போராட்டம், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது.

அத்தகைய தொழிலாளர்கள் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி, வழிகாட்டிய மாபெரும் தலைவர் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் ஆவார்.

அத்தகைய போராட்டம்தான் தஞ்சை தரணியெங்கும் விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களை அமைப்பு ரீதியாக அணி திரள விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது.

சங்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே, விவசாயிகள் பிரச்சனைகள் குறித்தும், அவர்களின் துன்ப துயரங்கள் குறித்தும், சிறு பிரசுரங்களை வெளியிட்ட ‘தாரா’ அச்சகம் இன்றும் நாகையில் இயங்கிக் கொண்டுள்ளது.

மணலூர் மணியம்மை ஆண் உடை தரித்து, விவசாயிகள் சங்கம் கண்டவர்.

இங்கே நாகூர் ஆண்டவரும், வேளாங்கண்ணி மாதாவும், எட்டுக்குடி முருகன் கோவிலும் அமைந்துள்ளது மட்டுமல்ல, மத நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்வதும் நாகைதான்.

நாட்டின் விடுதலைப் போராட்டத்தில், மிக முக்கியப் போராட்டமான உப்பு சத்தியாகிரகப் போராட்டம் நடைபெற்றதும் நாகை மாவட்டத்திலுள்ள வேதாரண்யம்தான்.

1952 முதல் பொதுத் தேர்தலில் நாகை சட்டமன்ற இரட்டை உறுப்பினர் தொகுதியில் சிவராஜ், எஸ்.வடிவேல் ஆகிய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர்.




சகஜானந்த சரஸ்வதி



ஜெயப்பிரகாஷ் நாராயணன்




ராம் மனோகர் லோகியா



இஸட் ஏ அகமது



ராகுல் சாங்கிருத்யாயன்



சுந்தரய்யா

நாடாளுமன்றத் தேர்தல்களில் அனந்த நம்பியார், எம்.காத்தமுத்து, எஸ்.ஜி. முருகையன், கே.முருகையன், எம்.செல்வராசு, வை.செல்வராஜ் எனத் தொடர்ந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தோழர்களைத் தேர்ந்தெடுத்ததும் நாகை தொகுதிதான்.

விவசாயிகள் சங்கம், விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆகிய இரு பெரும் வர்க்க அமைப்புகள் மிகுந்த பலத்துடன் அமைப்பு ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் இயங்கக் கூடிய, செயல்படக்கூடிய அமைப்புகளாகச் செயல்பட்டு வருவதும் நாகையை உள்ளடக்கிய ஒன்றுபட்டை தஞ்சை தரணியாகும்.

சாட்டையடிக்கும், சாணிப் பாலுக்கும் சாவு மணி அடித்ததும் இங்கேதான்.

பி.எஸ்.ஆர், மணலி, காத்தமுத்து, சிவராமன், இரணியன், களப்பால் குப்பு, ஆம்பலாப்பட்டு ஆறுமுகம், கோட்டூர் ராசு, சிவகுருநாதன் என நூற்றுக்கணக்கான தியாகிகளைத் தந்ததும் இம்மண்தான்.

அத்தகைய தியாக பூமியில்தான் 1964 க்குப் பின்னர், 1968இல் உலகம் கண்டிராத, கொடிய கொடுமை கீழ்வெண்மணியில் நடைபெற்றது.

குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் என 44 உழைக்கும் மக்களைக் குடிசையில் அடைத்து தீயிட்டுக் கொளுத்திய கொடூரமும் இங்கேதான் நிகழ்ந்தது.

இத்தகைய தியாக பூமியில், நமது அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின், 30 வது தேசிய மாநாடு நடைபெற உள்ளது.

நமது பணிகள் என்ன?

அடுத்த வாரம் சந்திப்போம்!

வணக்கம்

தோழமைமிக்க,

(இரா.முத்தரசன்)

மாநிலச் செயலாளர்

# 2025, மார்ச் 23 முதல் ஏப்ரல் 14 வரை
# நாடு தழுவிய அரசியல் பிரச்சாரம்





டி. ராஜா

**உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியா இன்று ஒரு முட்டுச் சந்தில் நிற்கிறது. நமது குடியரசை ஆதரிக்கும் கொள்கைகளான சோசலிசம், மதச்சார்பின்மை, சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.**

பெரும்பான்மை வாதத்தை நோக்கி நாட்டைத் திருப்புவது, அதிகாரத்தை மையப்படுத்தல், கூட்டாட்சி முறைமையை சிதைத்தல், அதிகரித்து வரும் சமத்துவமின்மை ஆகியவை புதிய அரசியல் சமூக சூழலை நோக்கித் தள்ளுகின்றன. எல்லோரையும் உள்ளடக்க மறுத்து சிலரை விலக்கி வைத்தல், சகிப்புத்தன்மை சிறிதும் இல்லாத அநீதி ஆகியவையே இன்று அரசியலாகிறது.

மோடி அரசாங்கம் பேரழிவு தரும் பொருளாதாரக் கொள்கைகளைத் தீவிரமாகப் பின்பற்றி வருகிறது, உழைக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை அழித்து வருகிறது. பெருநிறுவனங்களின் லாபமே குறியலக்காகிறது. சாதாரண குடிமக்கள் அதிகரித்துக் கொண்டே செல்லும் விலைவாசி உயர்வாலும், வேலையின்மையாலும், உழைத்தாலும் வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் கிட்டாததாலும், மக்கள் வாழ்க்கை தரத்தை இழந்து, போராடி வருகின்றனர். ஒரு காலத்தில் பலமாகக் கருதப்பட்ட இந்தியாவின் மக்கள்தொகை, அதிகரித்து வரும் வேலையின்மையால், பேரழிவாக மாறும் அபாயம் உள்ளது.

கார்ப்பரேட் பெரு நிறுவனங்களுக்கு ஆதரவான கொள்கைகள், பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியாருக்கு தரைமட்ட விலையில் தாரை வார்த்தல், தொழிலாளர்களின் உரிமைகளை பறித்தல், சமூகத்தின் அடிமட்டத்தில் உள்ள மக்களை இன்னும் விளிம்புகளை நோக்கித் தள்ளுதல் ஆகியவற்றால் இந்தப் பொருளாதார நெருக்கடி மேலும் அதிகரிக்கிறது.

அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள கூட்டாட்சி முறைமையை புறக்கணித்து, மாநில அரசுகளை வலுவிழக்கச் செய்து, அனைத்து அதிகாரங்களையும் மையத்தை நோக்கிய குவிப்பது ஆகியவை இன்று இந்தியா எதிர்கொள்ளும் முக்கியமான சவாலாகும்.

தேசிய கல்விக் கொள்கை (NEP) வலுக்கட்டாயமாக நுழைக்கப்படுவது, உணவுப் பழக்கங்களை ஒரே மாதிரியாக மாற்ற முயற்சிப்பது, கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் போன்ற முக்கியமான துறைகளில் மாநில அரசுகளின் அதிகாரத்தை வலுவிழக்கச் செய்வது, ஆகியவை இந்தப் போக்கின் தெளிவான அறிகுறியாகும். இந்தியாவின் பழமையான பன்முகத்தன்மையை புறக்கணித்து, ஆர்.எஸ்.எஸ் பிஜேபியின் பெரும்பான்மை வாதத்தை திணிப்பதற்காகவே ஒரு மொழியை தேசிய மொழி என்ற பெயரில் அந்த மொழியைச் சாராதவர்கள் மீது அரசு திணிக்கிறது. இது ஒரு கலாச்சார மேலாதிக்கத்தை நிறுவுவதற்கான முயற்சியாகும்.

கூட்டாட்சி முறைமையை சிதைப்பது என்பது வெறும் கவலையளிப்பது மட்டுமல்ல, இந்தியாவின் பன்முகத்தன்மையில் ஒற்றுமையின் மீதான நேரடித்தாக்குதலாகும். நிதி வளங்களைப் பகிர்ந்தளித்தல், புலனாய்வு அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் இயற்கை பேரழிவுகளைக் கையாள்வது போன்ற விஷயங்களில் எதிர்க்கட்சிகளால் ஆளப்படும் மாநிலங்கள் பெரும்பாலும் மத்திய அரசோடு முரண்படுகின்றன. பிரதமர் மோடி முன்பு நிறையப் பேசி வந்த கூட்டுறவு, கூட்டாட்சி முறைமையின் மதிப்பு இத்தகைய போக்குகளால் பெரிதும் வெட்டிக் குறைக்கப்படுகின்றன. ஒவ்வொரு சாத்தியமான வாய்ப்பிலும், இந்தியாவின் நிர்வாக கட்டமைப்பின் அடித்தளம் அடித்து நொறுக்கப்படுகிறது.

இந்தியாவில் பொருளாதார சமத்துவமின்மை ஆபத்தான விகிதத்தில் வளர்ந்து வருகிறது. மக்களில் கணிசமான பகுதியினர் தங்கள் வாழ்க்கையை நடத்தப் போராடும் அதே வேளையில், பெருங்கோடீஸ்வரர்களின் செல்வம் அதிவேகமாக அதிகரித்துள்ளது. தனியார்மயமாக்கலுக்கு முன்னுரிமை அளிக்கும் மோடி அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கைகள், ஏழைகளுக்குப் பணக்காரர்களுக்குமான இடைவெளியை மேலும் விரிவுபடுத்தியுள்ளன.

டாக்டர் பீம்ராவ் அம்பேத்கர் போன்ற தலைவர்களின் சமத்துவ மற்றும் சாதி எதிர்ப்பு தத்துவத்துடன் முரண்படுகின்றன. அதிகரித்து வரும் சாதி அடிப்படையிலான வன்முறைச் சம்பவங்கள், தலித்துகள் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களுக்கு, அரசியலமைப்பு உரிமைகள் மறுக்கப்படுவதும், கல்வி மற்றும் கலாச்சார நிறுவனங்கள் மூலம் சாதிய கட்டமைப்பு கெட்டி படுத்தப்படுவதும் இந்தப் பின்னடைவுப் போக்கிற்குச் சான்றாகும்.

இந்தச் சூழலில், டாக்டர் அம்பேத்கரின் மரபும், அவர் மிகவும் கவனமாக வடிவமைத்த அரசியலமைப்பும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகிறது. நிலப்பிரபுத்துவ அடக்குமுறைக் கட்டமைப்புகளை மீட்டெடுக்க விரும்பும் சக்திகளால், நீதியும் சமத் தன்மையும் நிறைந்ததான இந்தியா குறித்த அவரது தொலைநோக்குப் பார்வை சிதைக்கப்பட்டு வருகிறது. அம்பேத்கரின் மரபைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள உரிமைகள் பாதுகாக்கப்பட்டு நிலைநிறுத்தப்படுவதை உறுதி செய்வதையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கீகரிக்கிறது.

உலகளவில், அமெரிக்காவில் டொனால்ட் டிரம்பின் சமீபத்திய தேர்தல் வெற்றி அரசியல் சவால்களுக்கு மற்றொரு பரிமாணத்தைச் சேர்க்கிறது. சமூகத்தின் பெரும்பகுதியான உழைக்கும் மக்களை ஒதுக்கி தள்ளுவது, கார்ப்பரேட் செல்வந்தர்களுக்கு சாதகமாகவே பொருளாதாரக் கொள்கைகளை வடிவமைப்பது என உலகளாவிய வலதுசாரி கூட்டணியின் தோற்றம், உலகளவில் உள்ளடக்கிய மற்றும் பன்முக மதிப்புகளை அச்சுறுத்துகிறது. டிரம்ப் நிர்வாகத்திற்கும் ஆர்.எஸ்.எஸ்பாஜக கூட்டணிக்கும் இடையிலான கருத்தியல் ஒருங்கிணைப்பு இந்தியாவில் பிற்போக்கு சக்திகளை தைரியப்படுத்தலாம் மற்றும் குடியரசின் அரசியலமைப்பு மதிப்புகளை மேலும் சீர்குலைக்கலாம்.

மேலும், இந்த உலகளாவிய வலதுசாரி மாற்றம், இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் அமைதி, வளர்ச்சி மற்றும் நிலைத்தன்மையை ஆபத்தில் ஆழ்த்தக்கூடிய ஏகாதிபத்திய போக்குகள் வலுவடைவதையும் குறிக்கிறது.

வரலாற்றின் இந்த முக்கியமான கட்டத்தில் ஆர்.எஸ்.எஸ்ஸின் நிகழ்ச்சி நிரலை எதிர்ப்பது அவசியம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. அவ்வாறு செய்யத் தவறினால் நாட்டின் பன்முகத்தன்மை மற்றும் அதன் குடிமக்களின் ஜனநாயக உரிமைகளுக்கு ஈடுசெய்ய முடியாத சேதம் ஏற்படும்.

பெரும்பான்மைவாதத்தின் ஆபத்துகள், மதச்சார்பற்ற மதிப்புகளை நிலைநிறுத்துவதன் முக்கியத்துவம், அனைவரையும் உள்ளடக்கியதாக இல்லாமல், சலுகை பெற்ற சிலருக்கு மட்டுமே பொருளாதாரத்தின் பலன்களை கொண்டு சேர்த்தல் ஆகிய பெரும் ஆபத்துகளை அம்பலப்படுத்துவதில் இந்தப் பரப்புரை இயக்கம் கவனம் செலுத்தும்.

இந்தியாவின் இன்றைய போராட்டம் வெறும் அரசியல் போராட்டம் மட்டுமல்ல, அதன் ஆன்மாவிற்கான போராட்டம். சோசலிசம் மதச்சார்பின்மை, சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகிய இலட்சியங்கள் வெறும் அரசியலமைப்பு கொள்கைகள் அல்ல, அவை இந்தியாவை ஒரு குடியரசாக மாற்றுவதன் சாராம்சம்.

தியாகி பகத் சிங் மற்றும் டாக்டர் அம்பேத்கரின் மரபுடன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வீதிகளில் இறங்கும்போது, இந்தியாவின் பன்முகத்தன்மை உள்ளடக்கிய அடையாளத்தைப் பாதுகாக்க இந்தப் போராட்டத்தில் கைகோர்க்க அனைத்து ஜனநாயக மற்றும் முற்போக்கான சக்திகளையும் அழைக்கிறது. முன்னோக்கி செல்லும் பாதை சவாலானதாக இருக்கலாம், ஆனால் மக்களின் சக்தி மிகவும் வலிமையான சவால்களைக் கூட வெல்ல முடியும் என்பதை வரலாறு காட்டுகிறது. நீதியான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் வளமான இந்தியா என்ற தொலைநோக்குப் பார்வையை எழுச்சி பெறவும், எதிர்க்கவும், மீட்டெடுக்கவும் இதுவே நேரம்.

## சமூக நீதி, சமத்துவத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு இயக்கம்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதில் முன்னணியில் இருந்து வருகிறது, மேலும் உலகளவில் முற்போக்கான இயக்கங்களுடன் அணிசேராமை, அமைதி மற்றும் சர்வதேச ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்ட வெளியுறவுக் கொள்கையை ஆகியவற்றுக்காக தொடர்ந்து போராடி வருகிறது.

இந்தப் பன்முக சவால்களை எதிர்கொள்ள, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தியாகி பகத் சிங் தூக்கிலிடப்பட்ட தினமான மார்ச் 23, 2025 முதல் டாக்டர் பீம்ராவ் அம்பேத்கரின் பிறந்த நாளான ஏப்ரல் 14, 2025 வரை தீவிர அரசியல் பரப்புரையைத் தொடங்குகிறது.

இந்தியாவின் மாபெரும் சுதந்திர இயக்கத்தின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு செல்வதையும், அந்த இயக்கத்தின் மரபைத் தகர்க்க ஆர்எஸ்எஸ்பாஜகவின் திட்டங்களை அம்பலப்படுத்துவதையும் இந்த பரப்புரை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது, பேரணிகள், கருத்தரங்குகள், பொதுக் கூட்டங்கள், கலாச்சார நிகழ்வுகள் போன்ற பல்வேறு வடிவங்களில் மேற்கொள்ளப்படும்.

இந்த முயற்சி வெறும் அரசியல் பிரச்சாரம் அல்ல, மாறாக குடியரசின் முக்கியக் கொள்கைகளான சோசலிசம், மதச்சார்பின்மை, சமூக நீதி மற்றும் சமத்துவத்தை மீட்டெடுப்பதற்கான ஒரு இயக்கமாகும். நாட்டின் சுதந்திரத்திற்காக தனது உயிரைத் தியாகம் செய்த பகத்சிங்கின் வாழ்க்கையும் பணியும், நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவம் சகோதரத்துவத்தை உறுதிப்படுத்தும் அரசியலமைப்பை தேசத்திற்கு வழங்கிய டாக்டர் அம்பேத்கரின் வாழ்க்கையும் பணியும், நீதி மற்றும் வளமான இந்தியாவிற்கான போராட்டத்தைத் தொடர்ந்து ஊக்குவிக்கின்றன.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 87 இதழ் 50

## அதர்மப் பிரதான்!

பெயரில் தர்மம் இருந்தாலும் பேசுவதெல்லாம் அதர்மம், அடாவடி, அராஜகம், அநியாயம்.

தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, ‘நேர்மையற்றவர்கள்’, ‘அன்சிவிலைஸ்டு’ அதாவது காட்டுமிராண்டிகள் என்று அவையிலேயே அமைச்சர் பேசியது, அவரும் அவரது கட்சியும் அவர்களது ஆட்சியும் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமானது என்பதையே நிரூபிக்கிறது.

கடும் எதிர்ப்பினால் சொல்லைத் திரும்பப் பெற்றார் தர்மேந்திர பிரதான். அவைக் குறிப்பில் இருந்து அகற்றி என்ன பயன்? நீக்கப்படும் முன்பாகவே உலகெங்கும் தெரிந்துவிட்டது.

நியாயம் பார்க்கிறார்களென நினைத்து விடாதீர்கள் என்று நிர்மலா சீதாராமன் வந்து, எங்களுக்கு நல்ல வார்த்தைகளே வராது என்று நீண்ட விளக்கம் கொடுத்து விட்டார்.

ஆனால், நேர்மையற்றவர்கள் என்று சொல்லில் உறுதியாக இருப்பதாகச் சொன்ன அந்தப் பிரதான், அதற்கு ஆதாரமாக தமிழ்நாடு அரசின் அன்றைய தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா எழுதிய கடிதத்தைத் தனது எக்ஸ் தளத்தில் பகிர்ந்தார்.

ஆனால், கடிதத்தில் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்பதாக எதுவும் இல்லை. பரிசீலிக்கக் குழு அமைத்திருப்பதாகவும், அதன் பரிந்துரையைப் பெற்று முடிவு செய்வதாகவும் சொல்லப்பட்டுள்ளது.

“எல்லா மாநிலங்களும் ஏற்கும் போது தமிழ்நாடு மட்டும் ஏன் மறுக்கிறது?” ஜாக்சன் துரையின் வசனம் பேசினார் பிரதான்.

கர்நாடக மாநிலமும் கூட, இந்தக் கொள்கையை ஏற்கவில்லை. ஆனாலும் கையெழுத்திட்டு இருக்கிறார்கள் என்கிறார்.

தமிழ்நாட்டின் கல்வித்துறை அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தன்னை நேரில் சந்தித்து மும்மொழித் திட்டத்தை ஏற்பதாகச் சொன்னார்கள் என்றும் சரடு விட்டார்.

அப்புறம் தான், தன்னைச் சந்தித்த குழுவிடம், மும்மொழித் திட்டத்தை ஏற்பதாகக் கையெழுத்திடுங்கள். ஆனால் செயல்படுத்த வேண்டியதில்லை என ஆலோசனை சொன்னாராம்!

ஆளுக்கு 15 லட்ச ரூபாய் கொடுப்போம் என்று சொல்லுவோம். ஆனால் கொடுக்க மாட்டோம்; இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று சொல்லுவோம். ஆனால் திணிப்போம் என்ற ஆர்எஸ்எஸ் பாஜகவின் நயவஞ்சக நரித்தனத்தை நாடு தழுவிய கொள்கையாக மாற்ற அவர்கள் முயற்சிப்பது தெரிகிறது.

மூன்றாவது மொழியாக இந்தியோ, வேறெந்த இந்திய மொழியையோ கொள்ளலாம் என்று அவர்கள் பேசுவதும் நயவஞ்சகத்தின் இன்னொரு வடிவம்.

மூன்றாவது மொழியாக இந்தி படிக்க வேண்டும் என்று நான் சொல்வதில் என்ன தவறு என்று அமித்ஷா 2019ல் சொன்னார். எதிர்ப்பு வலுக்கவே, மௌனம்.

மறுபடியும் 2022ல் ஒன்றிய அரசின் அலுவல்களில் 70 சதவீதம், இந்தியில் மேற்கொள்ளப்படுவதாகவும்

இந்தியை நாட்டின் பொது மொழியாக்குவதற்கான நேரம் வந்துவிட்டது என்று அமித்ஷா பேசினார்.

மூன்று ஆண்டுகளில் சமஸ்கிருத மேம்பாட்டுக்காக 643.84 கோடி ரூபாயை ஒதுக்கியது ஒன்றிய அரசு. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடியா ஆகிய மொழிகளின் மேம்பாட்டுக்காக ஒதுக்கிய மொத்தத் தொகையை விட இது 22 மடங்கு அதிகம். செத்துப்போன மொழிக்குப் பணத்தைக் கொட்டுகிறார்கள்!

உலகின் ஆதிமொழிகளில் இன்றும் பேசப்படுகிற, அனைத்து அறிவியல் தேவைகளுக்கும் ஈடு கொடுக்கிற ஒரே ஒரு மொழியான தமிழை ஏன் தள்ளி வைக்கிறார்கள்?

5000 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழர்கள் இரும்பைப் பயன்படுத்தி வந்தார்கள் என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட பின்னும், அதுபற்றி வாய்திறக்க மறுக்கும் வன்மம் எப்படி வந்தது?

தமிழ் மொழியை விட சமஸ்கிருதம்தான் பழமை வாய்ந்தது என்று நாடாளுமன்றத்தில் பாஜக எம்.பி. நிஷிகாந்த் துபே எதற்காகப் பெருமை பேசுகிறார்? தமிழ், தமிழர்கள் என்று சொன்னால் இவர்களுக்கு எங்கெங்கோ எரிவது ஏன்?

புயல்களுக்குக் கூட, சுழற்சி வரிசையில் ஒவ்வொரு நாடும் தனது மொழியில் பெயர் வைக்கிறது. ஆனால் ஒன்றிய அரசின் சட்டங்களும், திட்டங்களும் ஏன் சமஸ்கிருதத்திலேயே பெயர் சூட்டப்படுகின்றன?

தமிழ்நாடு இவற்றை விவாதித்துக் கொண்டிருக்கிறது.

மொழியை வைத்து திமுக அரசியல் செய்கிறது, மாணவர் வாழ்வைச் சீரழிக்கிறது என்கிறார்கள். 1939ல் ராஜாஜி கட்டாய இந்தியைக் கொண்டு வந்து, எழுந்த எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாமல் பதவி விலகினார். அப்போது திமுக என்ற கட்சியே இல்லை.

கூலிக்கு ஆள் பிடித்து, பெரியாரைத் தாக்கினால், எல்லாம் தகர்ந்து விடும் என்று நினைக்கிறார்கள். தமிழ்நாட்டின் ஆன்மா எங்கிருக்கிறது என்று தெரியாத அறிவாளிகள்!

தமிழ்நாட்டுக்கான ரூ.2152 கோடி கல்வி நிதியைக் கொடுத்து, மாநில உரிமைகளை மதித்து, மும்மொழி என இந்தியைத் திணிப்பதை ஒதுக்கித் தீர்வுக்கு வரவேண்டும்.

மறுத்தால், அடங்காது தமிழ்நாடு!

# ஒன்றிய அரசு பூம்கார்டு அடையாள அட்டை வழங்குவதைக் கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்






















ஒன்றிய அரசு விவசாயிகள் மானியம் பெறுவதற்கும், விவசாயக் கடன்கள் தள்ளுபடி மற்றும் நலநிதி பெறுவதற்கும் பட்டா வைத்திருப்பவர்களுக்கு மட்டும் பூம்கார்டு என்கின்ற அடையாள அட்டை வழங்குவதைக் கைவிட வேண்டும், புதிய உணவுக் கொள்கையால் நெல் கொள்முதலைத் தனியாருக்குத் தாரைவார்க்கும் போக்கைக் கைவிட வேண்டும், தமிழ்நாட்டில் நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் மட்டுமே நெல் கொள்முதல் செய்யப்பட வேண்டும், பிரதமர் விவசாயிகள் நலநிதித் திட்டத்தில் விவசாயிகள் அனைவருக்கும் மாதம் ரூபாய் 2000 நலநிதி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**திருவண்ணாமலை:** திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் நகரத்தில், எஸ்.ராஜா தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கோரிக்கைகளை விளக்கி ஏஐடியுசி மாவட்ட தலைவர் வே.முத்தையன், ஏஐடியுசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.எஸ். மாதேஸ்வரன், கட்சியின் செங்கம் வட்டச் செயலாளர் எஸ்.சர்தார், ஆட்டோ சங்க மாவட்ட கௌரவத் தலைவர் கே.அப்துல் மஜீத் ஆகியோர் ஒன்றிய அரசைக் கண்டித்துப் பேசினார்கள்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் முன்பாக, சங்கத்தின் ஒன்றியச் செயலாளர்கள் கோ.இராமலிங்கம், எம்.அய்யாராசு ஆகியோர் தலைமையில், ஆர்ப்பாட்டத்தினைச் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சோ.பாஸ்கர் துவக்கி வைத்தார். மாவட்ட தலைவர் ஆர்.இராமச்சந்திரன் ஆர்ப்பாட்டத்தினை நிறைவு செய்து உரையாற்றினார். இதில் கட்சியின் மாவட்டச் செயலாளர் முத்து உத்திராபதி, துணைச் செயலாளர் கோ.சக்திவேல், பொருளாளர் கோ.பாஸ்கர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தர்மபுரி:** தர்மபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்பாட்டத்திற்கு, மாவட்டச் செயலாளர் எஸ்.சின்னசாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் விடுதலைவிரும்பி, புள்ளாறு, தமிழ்செல்வி முன்னிலை வகித்தனர். கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.தேவராசன், மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச்செல்வம் ஆகியோர் கோரிக்கைகள் குறித்துப் பேசினார்கள்.

**தஞ்சாவூர் வடக்கு:** தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் தலைமை அஞ்சலகம் அருகில், சங்க ஒன்றிய தலைவர் வீரப்பன் தலைமையில், மாவட்டத் துணைத் தலைவர் கலியபெருமாள் தொடக்க உரையாற்ற, கோரிக்கைகளை விளக்கி சிபிஐ நகரச் செயலாளர் சுதாகர், சிபிஐ ஒன்றியச் செயலாளர் பூபேஷ் குப்தா ஆகியோர் பேசினர். மாவட்ட துணைச் செயலாளர் துரை.பன்னீர்செல்வம் நிறைவுரையாற்றினார்.

**திருச்சி:** திருச்சி மணப்பாறை பேருந்து நிலையம் எதிரில், ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் தலைமையில், ரவிச்சந்திரன், கண்ணதாசன், சண்முகம், ராமையா, மணி, கோவிந்தராஜ், சொக்கை பழனிச்சாமி ஆகியோர் முன்னிலையில், விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் பழனிச்சாமி, கட்சியின் நகரச் செயலாளர் ஜனசக்தி உசேன், வையம்பட்டி ஒன்றியச் செயலாளர் தங்கராஜ், நகர துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, அமைப்புசார சங்கச் செயலாளர் நல்லுச்சாமி ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

**நாகை:** திருக்குவளை வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் டி.செல்வம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடத்தி, வட்டாட்சியரிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதில் விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலாளர் எம்.ஹாஜா அலாவுதீன், மாவட்ட துணைச் செயலாளர் ஏ.ராமலிங்கம், சிபிஐ ஒன்றிய துணைச் செயலாளர் வீ.எஸ். மாசேத்துங் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**நெல்லை:** திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் காமராஜர் சிலை முன்பு, மாவட்ட தலைவர் எஸ்.வி.கிருஷ்ணன் எக்ஸ் எம்எல்ஏ தலைமையில் நடைபெற்றது.

இதில் அம்பை நமச்சிவாயம், சுப்பிரமணியன், களக்காடு திருமணி, ஜவஹர், நாங்குநேரி தங்கமணி, ரவி, வள்ளியூர் துரை, முத்தையா ஆகியோர் கலந்து கொண்டார்கள். விவசாய சங்க மாவட்டச் செயலாளர் என்.கலை முருகன் சிறப்புரையாற்றினார். கட்சியின் மாவட்ட துணைச் செயலாளர் ஏ.சேதுராமலிங்கம்,


எம்.லெனின் முருகானந்தம், எஸ்.ஏ.பி.பாலன், சந்தனமுத்து ஆகியோர் கோரிக்கையை வலியுறுத்திப் பேசினார்கள்.



த.லெனின்

மகாபாரத இதிகாசத்தில் சாந்தி பருவத்தின் கீழ் அமைந்துள்ள ராஜதர்ம அனுசாசனப் பருவத்தில், அம்புப் படுக்கையில் இருக்கும் பீஷ்மர், தனது பேரனும் அரசனுமாகிய தர்மராஜனுக்கு அரசாட்சி பற்றிப் போதிக்கிறார்.

# அமெரிக்காவுக்கு அடிமைச் சேவகம் செய்யவா இந்தியா?




அறிவுடைய மனிதன், எப்படி பசுமாட்டிடம் ஒரேயடியாகப் பாலைக் கறந்துவிடாமல், அதனைத் தொடர்ந்து பாதுகாத்து, பாலைச் சுரக்கவிட்டு, தினசரி கறக்கிறானோ, அதுபோல மன்னனும் தனது குடிமக்களைப் பாதுகாத்து, வளர்ச்சி அடையச் செய்து, தொடர்ச்சியாக வரி வருவாயை வசூலிக்க வேண்டும் என்கிறார் பீஷ்மர்.

ஆனால் இதிகாசப் பெருமை பேசும் மோடி அரசு அமெரிக்காவே பரிகாசம் செய்யும் அளவிற்கு உலகிலேயே அதிகம் வரி வசூலிக்கும் நாடாக இந்தியா மாறிவிட்டது. உழைக்கும் மக்கள், சாதாரண ஏழை, எளிய, மக்கள் மிக அதிகமான வரிச்சுமையையும், எதையும் தாங்கும் பெரும் பணக்காரர்கள் மிகக் குறைந்த வரி விதிப்பையும், வரிச் சலுகைகளையும் கொண்டிருக்கிற அதிசய நாடு இந்தியா! இதுதான் அவர்கள் கனவு காணும் ராம ராஜ்ஜியம்!

## அமெரிக்காவுக்கே முன்னுரிமை!

புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் டிரம்ப் நிர்வாகம், "அமெரிக்க நலன்களுக்கு முன்னுரிமை" என்ற கொள்கையை வலியுறுத்துவதால், இந்திய அமெரிக்க வர்த்தக உறவுகள் ஒரு புதிய அடிமை நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது.

இந்தியா எவ்வளவு வரி விதிக்கிறதோ அதே அளவு வரியை இந்திய இறக்குமதியின் மீது வரி விதிக்கும் பரஸ்பர வரியை ஏப்ரல் 2 ஆம் தேதி முதல் அமல்படுத்தப் போவதாக டிரம்ப் எச்சரித்துள்ளார். இது இந்திய வர்த்தகத்தைப் பாதிக்கும் என்பதால், இந்த நடவடிக்கையைத் தவிர்க்க ஒன்றிய வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல் அமெரிக்கா சென்று அந்நாட்டு வர்த்தக அமைச்சர் ஹோவர்ட் லுட்னிக்குடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். ஏற்கனவே, கனடா, மெக்சிகோ போன்ற நாடுகள் மீது 25 சதவீத வரியை டிரம்ப் அறிவித்தார்.

மெக்சிகோ அதிபர் தனிப்பட்ட முறையில் டிரம்புடன் தொலைபேசியில் உரையாடியதைத் தொடர்ந்து வரி விதிப்பை ஒரு மாதத்திற்கு டிரம்ப் ஒத்திவைத்துள்ளார். இதேபோல, கனடா மீதான வரி விதிப்பையும் அவர் ஒத்திவைத்துள்ளார். ஆனால் அதிபர் டிரம்புடன் ஆழமான நட்புறவைக் கொண்டிருந்தாலும் இந்த விவகாரத்தில் பிரதமர் மோடி நேரடியாகத் தலையிடவில்லை. சமீபத்தில் வெள்ளை மாளிகையில் பிரதமர் மோடியைச் சந்திப்பதற்குச் சில நிமிடங்கள் முன்பாகத்தான் டிரம்ப் பரஸ்பர வரியை அறிமுகப்படுத்தப் போவதாகக் கூறினார் என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

## மோன நிலையில் மோடி!

மோடியின் அமெரிக்க வருகை உறுதி செய்யப்படுவதற்கு முன்பே, அமெரிக்காவில் இருந்து சட்டவிரோதமாகக் குடியேறிய 104 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டது இந்தியாவில் ஒரு அரசியல் புயலைக் கிளப்பியது. அவர்கள் நாடு கடத்தப்பட்டு, சங்கிலியால் பிணைக்கப்பட்டு, விலங்கிடப்பட்டு, இராணுவ விமானத்தில் தாய் நாட்டிற்கு அனுப்பப்பட்ட விதமும் அரசாங்கத்தைக் கையறு நிலைக்குக் கொண்டு சென்றது.

பிரதமர் மோடியிடமும் டிரம்ப் நேரடியாக வரி விதிப்பைப் பற்றிப் பேசிய போதும் பிரதமர் மோடி அதை எதிர்த்து ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அதுமட்டுமின்றிக் கடந்த சில நாட்களாகவே தொடர்ச்சியாக இந்தியாவின் வரி விதிப்பை டிரம்ப் கடுமையாக விமர்சித்து வருகிறார். அது ஏதோ இந்திய மக்களுக்குப் பரிந்து பேசுவதற்காக அல்ல மாறாக தனது பொருட்கள் இந்தியாவில் விற்கப்பட வேண்டும் என்றால் இந்த வரிக் கொடுமை அவர்களது வணிகத்தையும் பாதிக்கும் என்பதால்தான் இப்படிப் பேசி உள்ளார். ஆனால் இதற்கும் பிரதமர் மோடியோ, ஒன்றிய அரசு தரப்பிலோ ஒரு கண்டனமோ, எதிர்ப்போ கூட தெரிவிக்கப்படவில்லை. அடக்கமாக, அமைதிகாத்து மோன நிலை மூலம் தங்களது அமெரிக்க விசுவாசத்தை மெய்ப்பித்திருக்கிறார்கள்.

இந்நிலையில், அதிபர் டிரம்ப் தனது ஓவல் அலுவலகத்தில் அளித்த பேட்டியில், "பொருளாதாரம், நிதி மற்றும் வர்த்தக விவகாரத்தில் உலகின் அனைத்து நாடுகளாலும் அமெரிக்கா முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. கனடா, மெக்சிகோ மட்டுமின்றி இந்தியாவும் நம்மிடம் அதிக வரிகளை வசூலிக்கிறது. இந்தியாவில் எதையும் நாம் விற்க முடியாது. கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நாம் அங்கு மிகக் குறைந்த வணிகத்தையே மேற்கொள்கிறோம். இப்போது இந்தியா தனது வரிகளைக் குறைத்துக் கொள்ள விரும்புகிறார்கள். ஏனென்றால் அவர்கள் உண்மையில் என்ன செய்கிறார்கள் என்பது அம்பலமானதைத் தொடர்ந்து இப்போது ஒப்புக் கொண்டுள்ளனர். சீனாவிலும் இதே நிலைதான் என்று பேசி உள்ளார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் நம்மை மிகவும் வஞ்சிக்கின்றன. இந்தியா அதிக வரி வசூலிப்பதாக இந்தக் காலத்தில் மட்டும் 3 வது முறையாக அதிபர் டிரம்ப் குற்றம்சாட்டிய நிலையில், திடீரென இந்தியா வரியைக் குறைக்க ஒப்புக் கொண்டதாகக் கூறியிருப்பது அதன் சரணாகதியைக் காட்டுகிறது.

இதுதொடர்பாக ஒன்றிய அரசின் தரப்பில் எந்த விளக்கமும் தரப்படவில்லை. பிரதமர் மோடி, அதிபர் டிரம்ப் சந்திப்பின் போது இருதரப்பினருக்கும் நன்மை தரும் வகையில் இருதரப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதென அப்போது முடிவு செய்யப்பட்டது. இதற்காக வர்த்தக அமைச்சர் பியூஸ் கோயல் அமெரிக்கா சென்று பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இதில், விவசாயப் பொருட்களுக்கான வரியைக் குறைக்க வேண்டும் என்றும், ஆயுதத் தளவாடங்களைத் தங்களிடம் அதிகமாக வாங்க வேண்டுமெனவும் அமெரிக்கா அழுத்தம் தருவதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்தச் சூழலில் அதிபர் டிரம்ப், இந்தியா வரியைக் குறைக்கச் சம்மதித்துள்ளதாகக் கூறியிருப்பது பல்வேறு சந்தேக அலைகளை ஏற்படுத்தி உள்ளது.

## இந்தியாவின் மௌனத்தை விமர்சிக்கும் சர்வதேச வர்த்தக ஆராய்ச்சி அமைப்பு!

தொடர்ந்து இந்தியாவை அவமானப்படுத்தும் டிரம்புடன் வர்த்தகப் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என்றும், பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவும் வரிகளை அறிவிக்க வேண்டும் எனவும் சர்வதேச வர்த்தக ஆராய்ச்சி அமைப்பின் (ஜிடிஆர்ஐ) தலைவர் அஜய் ஸ்ரீவஸ்தவா குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசுகையில், "தவறான தரவுகளைப் பயன்படுத்தி இந்தியாவைப் பகிரங்கமாக அவமானப்படுத்துகிறார் டிரம்ப். இதுபோன்ற சூழல் இருந்தால் இரு தரப்பிற்கும் வெற்றியைத் தரும் சமநிலையான முடிவு ஏற்பட சாத்தியமில்லை. எனவே, இந்தியா அமெரிக்காவுடனான அனைத்துவிதமான வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் இருந்தும் விலக வேண்டும். மற்ற நாடுகளைப் போல அமெரிக்காவை எதிர்கொள்ள வேண்டும்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த விஷயத்தில் இந்தியாவின் மவுனம் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. மேலும் டிரம்பும் அவரது அதிகாரிகளும், ஒவ்வொரு நாளும் இந்தியாவைச் சிறுமைப்படுத்துவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## விவசாயத் தற்சார்பை உடைக்க!

இந்தியாவில் விவசாயப் பொருட்களின் இறக்குமதிக்கு உள்ள கட்டுப்பாடுகளை நீக்க வேண்டும் இதற்காக வேளாண் சந்தையைத் திறக்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது. இதை இந்தியா ஏற்கக் கூடாது என்றும், அவ்வாறு வேளாண் சந்தையைத் திறந்துவிட்டால் இந்தியாவுக்குச் சிக்கலை ஏற்படுத்திவிடும் என்றும் அஜய் ஸ்ரீவஸ்தவா எச்சரித்தார்.

இந்தியாவில் விவசாயத் துறையை நம்பி 70 கோடி மக்கள் உள்ளனர். கிராமப்புற வேலைவாய்ப்பையும் இது அளித்து வருகிறது. ஆனால், அமெரிக்காவில் 70 லட்சம் பேர் மட்டுமே விவசாயத் துறையில் உள்ளனர். விவசாயத்திற்கான மானியமும் அமெரிக்காவில் பெருமளவு அளிக்கப்படுகிறது. எனவே, ஒரு சில விவசாயப் பொருட்களை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதித்தாலும்கூட அது ஆபத்தான முன்னுதாரணமாக அமைந்துவிடும். அதன் பிறகு அவர்கள் மேலும் மேலும் சலுகைகளைக் கேட்கத் தொடங்கிவிடுவார்கள். நாட்டின் இறையாண்மைக்கும் தற்சார்புக்கும் பெரும் பங்கம் விளைவித்து விடும்!

பல அமெரிக்க விவசாயப் பொருட்களுக்கு ஏற்கனவே குறைவான வரிதான் விதிக்கப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்க பாதாமிற்கு 5 சதவீதம் மட்டுமே வரி விதிக்கப்படுகிறது. பிஸ்தாவுக்கு 10 சதவீத வரி இருக்கிறது. அதேசமயம், இந்தியா விவசாயப் பொருட்களை அமெரிக்காவுக்குக் குறைவாகவே ஏற்றுமதி செய்கிறது. 5 பில்லியன் டாலர் மதிப்பிலான விவசாயப் பொருட்கள், பால் மற்றும் கடல்சார் பொருட்கள் மட்டுமே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. எனவே, இப்போது அவர்களின் விவசாயப் பொருட்களுக்கு வரி விதித்தாலும் கூட அது இந்தியாவின் ஏற்றுமதியைப் பெரிய அளவில் பாதிக்காது.

அதேசமயம், அமெரிக்காவின் கோரிக்கையை ஏற்று இன்று இந்தியா ஒப்புக்கொண்டால், எதிர்காலத்தில் அமெரிக்கப் பட்டியலில் மேலும் பல பொருட்கள் சேர்க்கப்பட்டுவிடும்.

பல நாடுகள் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளுக்கு எதிராக நிற்கும் நேரத்தில், இந்தியாவும் அதையே செய்ய வேண்டும். குறுகிய கால தீர்வைவிட நீண்டகாலப் பொருளாதார மீள்தன்மையில் கவனம் செலுத்த வேண்டும். புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கிராமப்புற வாங்கும் சக்தியையும் உயர்த்த வேண்டும். இத்தனை பணிகள் இருக்க இனிமேலும் மோடி அரசு மெத்தனம் காட்டலாமா? உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்று நம்மை உருக்குலைத்தது போதாதா? உள்நாடு என்றால் பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவு! வெளியுறவுக் கொள்கை என்றால் அந்த கார்ப்பரேட்டுகளின் மூலவிசை அமெரிக்காவின் கட்டளைகளுக்குத் தெண்டனிடுவது இதுதான். இந்தியா என்றால் அவர்கள் பேசும் இந்துத்துவா விசம் என்பது புலனாகிறது அல்லவா!

தொடர்புக்கு : 944448703

## எதிர்க்கும் நாடுகள்!

பல நாடுகள் டிரம்பின் வர்த்தகக் கொள்கைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்துள்ளன. சீனா, கனடா ஆகிய நாடுகள் பதிலடி நடவடிக்கையாக அமெரிக்காவின் இறக்குமதிக்குக் கூடுதல் வரிகளைத் தாங்களும் விதிக்கப் போவதாக அறிவித்துள்ளன. ஆனால் அமெரிக்கப் பொருட்களுக்கான இறக்குமதி வரியைக் குறைப்பதற்கு இந்தியா முடிவு செய்துள்ளது எதைக் காட்டுகிறது?

இத்தனைக்கும் பிரிக்ஸ் நாடுகள் தாங்கள், தங்களது வணிகத்திற்கு அமெரிக்க டாலருக்கு மாற்றாக ஒரு புது கரன்சியை, நாணயத்தை உருவாக்கப் போவதாகச் செய்திகள் வெளிவந்த நிலையில் அதை டிரம்ப் எச்சரித்தார். ஏன் மிரட்டவும் செய்தார். அந்த மிரட்டலுக்குப் பயந்து ஓடோடிச் சென்று இந்தியா தங்களுக்கு இதில் உடன்பாடு இல்லை என்று கூறியது உண்மையில் மோடி அரசின் உதறலையும், நடுக்கத்தையுமே காட்டியது.

உள்நாட்டுப் பிரச்சினைகள் என்றால் தீவிர வீராப்பு பேசும் இவர்கள்தான் அமெரிக்கப் பிரச்சனை என்றால் நவ துவாரங்களையும் பொத்தி தங்களது விசுவாசத்தைக் காட்டுகின்றனர்.

# தேசியக் கல்விக் கொள்கையைப் பின்பற்றாத ஒன்றிய அரசின் பள்ளிகள்!



மே.து.ரா.

**மாணவர் விரும்பும் மூன்றாவது மொழியினைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமையும் வாய்ப்பும் வேண்டும் என்றுதான் ஒன்றிய அரசு இப்போது பரப்புரை செய்துவருகிறது. பா.ச.க.வும் இந்தப் பச்சைப் பொய்யை வைத்துத்தான் பொழுதெல்லாம் போக்குக் காட்டுகிறது.**




ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்தின் (சிபிஎசுஇ) பாடத்திட்டத்தில் நடைபெறும் பள்ளிகளில் மூன்றாவது மொழியாக இந்தி அல்லாமல் வேறொரு மொழியினைப் படிக்கும் உரிமை இதுவரை வழங்கப்படவில்லை.

மேலும், ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்கள் அல்லது தமிழகப் பாடத்திட்டத்தை ஏற்றுக்கொண்ட சில தனியார் பள்ளி மாணவர்கள், இந்திக்காக மட்டுமே அத்தகைய பள்ளியில் சேர்கிறார்கள் என்ற கற்பனையும் கட்டமைக்கப்படுகிறது.

### எதற்காக மாணவர்கள் ஒன்றிய அரசின் பாடத் திட்டத்தில் சேர்க்கப்படுகின்றனர்?

இந்தி அல்லது வேறொரு மொழியினைப் படிக்கவேண்டும் என்பதற்காகப் பெற்றோர் எவரும் தங்கள் குழந்தைகளை ஒன்றிய அரசுப் பாடத்திட்டத்திலுள்ள பள்ளிகளில் சேர்ப்பதில்லை.

தங்கள் குழந்தைகளின் எதிர்கால நலனுக்கு உதவும் என்பதற்காக மட்டுமே பெற்றோர் பலர் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தில் உள்ள பள்ளிகளை நாடுகின்றனர். இதனால், மாநில அரசின் பாடத்திட்டம் தகுதி குறைந்ததாக இருக்கிறது என்று பொருளாகிவிடாது. ஒன்றிய அரசின் பாடத் திட்டத்துக்கு இணையான தகுதியளவுக்குத் தற்போது தமிழ்நாட்டரசின் சமச்சீர் கல்வித் திட்டமும் மேம்படுத்தப்பட்டுவிட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

மருத்துவம், பொறியியல் போன்ற உயர் கல்விக்கான நீட் உள்ளிட்ட நுழைவுத் தேர்வுகள் பலவும் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் அடிப்படையில் நடத்தப்படுவதால்தான், பெற்றோர் அத்தகைய பள்ளிகளைத் தேர்ந்தெடுக்கின்றனர் என்கின்ற உண்மையை பா.ச.க.வினர் மறைத்துவிடுகின்றனர்.

### இந்திக்காகவா மாணவர்கள் சி.பி.எஸ்.சி பள்ளிகளில் சேர்க்கப்படுகின்றனர்?

சில ஆண்டுகளுக்கு முன் மிகக் குறைவான எண்ணிக்கையில் 200 என்றிருந்த ஒன்றிய அரசின் பாடத்திட்டப் பள்ளிகள், இன்று 1835 என்று பெருகியிருப்பதற்கான அடிப்படையும் இதுதான். மருத்துவம், பொறியியல் போன்ற உயர் கல்விக்கானநுழைவுத்தேர்வுகள் அறிவியல், கணக்கு ஆகியவற்றையொட்டியே நடத்தப்படுகின்றன. அவை இந்தி மொழி அறிவுக்காக நடத்தப்படுவதில்லை. ஆகவேதான், அறிவியல், கணக்குப் பாடங்களைச் சிறப்பான முறையில் கற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையில் மட்டுமே பெற்றோர், அதுவும் செல்வநிலை கொண்ட பெற்றோர் ஒன்றிய அரசின் பாடப் பள்ளிகளிலும் தமிழக அரசின் பாடம் கொண்ட தனியார் பள்ளிகளிலும் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்கின்றனர். அத்தகைய பள்ளிகளில் படித்தாலும், மொழிப் பாடங்களுக்கான மதிப்பெண்கள் நேரடிப் பயன் தருவதில்லை. அறிவியல், கணக்கு போன்ற பாடங்களின் மதிப்பெண்களே பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதனை வைத்துக்கொண்டு, ஏதோ இந்தி மொழி படிப்பதற்காகத்தான் இத்தகைய பள்ளிகளில் சேர்கின்றனர் என்று பா.ச.க.வினர் மாற்றிக் கூறி மயக்கம் தர முனைகின்றனர். குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் நன்றாகத் தெரிந்திருக்கும் அடிப்படை உண்மை இது.

பா.ச.க.வினர் கூறுவது போல விருப்ப மொழியினைப் பயிலும் வாய்ப்பும் உரிமையும் இந்தப் பள்ளிகளில் இருக்கின்றனவா? என்பதைப் பார்த்தால் அதுவும் நடைமுறையில் இருப்பதாகத் தெரியவில்லை. மாநிலக் கல்வித் திட்டத்தில் மும்மொழிக் கொள்கையினை ஏற்றுக் கொண்டால்கூட, நாளை அந்த மூன்றாவது மொழியினைத் தேர்ந்தெடுக்கின்ற உரிமை அல்லது வாய்ப்பு மாணவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்காது. மாணவர் சேரும் பள்ளி எந்த மூன்றாவது மொழியினைப் பயிற்றுவிக்கிறதோ அந்த மொழியைத்தான் படித்தாக வேண்டும்.

### மாணவரின் மொழி விருப்பம் மதிக்கப்படுகிறதா?

ஒரு பள்ளி வகுப்பில் 40 மாணவர் இருந்தால், சிலர் இந்தி, வேறு சிலர் மலையாளம், பிறர் தெலுங்கு, கன்னடம், சமக்கிருதம், செர்மன், பிரெஞ்சு என்று படிக்க விரும்பினால் அவர்களில் ஒவ்வொருவருக்காகவும் தனித்தனியே வேறுவேறு ஆசிரியர்களை ஏற்பாடு செய்வது எளிதல்ல. இதனால், ஒரு பள்ளி எந்த மொழியினைத் தருகிறதோ அந்த மொழியினைத்தான் மாணவர் தேர்ந்தெடுத்தாக வேண்டும். விருப்பு, வாய்ப்பு என்பதெல்லாம் வெறும் ஏட்டில்தான். இதுதான் இன்று நடைமுறையில் நடந்து வருகிறது. இதனால், விரும்பும் மொழியினைப் படிப்பது வெறும் மாயைதான் என்பது புலனாகிறது.

### தமிழுக்கு மாறாக ஏன் வேற்று மொழியைத் தேர்ந்தெடுக்கின்றனர்?

இந்த இடத்தில் இன்னொரு உண்மையையும் பார்க்கத் தவறி விடக்கூடாது. மூன்றாவது மொழி இருக்கட்டும். முதலாவது மொழியாகச் சிலர் தமிழுக்கு மாறாக, சமக்கிருதம், செர்மனி, பிரெஞ்சு போன்ற வேறு மொழிகளைத் தேர்ந்தெடுத்துக்கொள்கின்றனர். இதற்கான அடிப்படைக் காரணி ஒன்றே ஒன்றுதான். அந்த மொழியினை அவர்கள் விரும்பித் தேர்ந்தெடுப்பதில்லை.

தமிழுக்கான பாடத்திட்டம் விரிவானது. தமிழ்ப் பண்பாட்டினை அறிந்து கொள்ளத்தக்கவாறு பண்டைய இலக்கியங்களில் இருந்து, இன்றைய இலக்கியங்கள் வரையிலான பாடங்கள், பிற இலக்கியங்கள், உரைநடைப் பகுதிகள், இலக்கணம் போன்றவை அதில் உள்ளடங்கியிருக்கும்.

ஆனால், சமக்கிருதம், செர்மனி, பிரெஞ்சு போன்ற மொழிப் பாடங்கள் அரிச்சுவடியில் தொடங்கித் தரப்படும் தொடக்கநிலைப் பாடங்கள் மட்டுமேயாகும். இதனால், இவற்றைப் படிப்பது எளிது, மதிப்பெண்கள் பெறுவது இன்னும் எளிது என்பதற்காகவும் அந்த மொழிப் பாடங்களைப் படிக்கக் குறைந்தகால அளவே போதுமானது என்பதற்காகவும் மட்டுமே அவை மாணவராலும் பெற்றோராலும் நாடப்படுகின்றன. மொழிப் பாடத்தைப் படிப்பதற்கான காலத்தை அறிவியல், கணக்கு போன்ற பாடங்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளவே தமிழ் அல்லது தாய்மொழி புறக்கணிக்கப்படுகிறது; வேறு மொழிகள் விரும்பப்படுகின்றன.

### புத்தகப் புழுவாக்கவா கல்வி?

விடுமுறை, விளையாட்டு. பொழுதுபோக்கு போன்ற அனைத்தையும் துறந்து, தேர்வுக்காக மட்டுமே, மதிப்பெண்கள் பெறுவதற்காக மட்டுமே ஓடிக்கொண்டிருக்கும் நடைமுறை உலகில் நாம் இருக்கும்போது, மூன்றாவது மொழியையும் படித்துக் காலத்தையும் முயற்சியையும் உழைப்பையும் வீணடிக்க எந்த மாணவரும் பெற்றோரும் விரும்புவதில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

ஆங்கில மொழியினைக் கற்றுக்கொள்ள பேசவும் எழுதவும் தெரிந்துகொள்ள, மொழிப் பாடமாகப் படிக்கும் ஆங்கிலம் மட்டும் போதாது என்ற மனப்போக்கு மக்களிடம் பெரிதும் ஆழமாகப் பதிந்துவிட்டது. ஆங்கில மொழியினைக் கற்றுத் தரக்கூடிய முறை இந்திய ஒன்றியத்தின் அனைத்து மாநிலங்களிலும் மேம்படாமல் இன்னும் இருப்பதே இதற்குக் காரணியாகலாம். இதனாலேயே, ஆங்கிலவழிக் கல்வி முறையில்தான் ஆங்கிலத்தை அறியும் வாய்ப்பு மிகுதி என்ற தவறான நம்பிக்கை ஏனோ இன்று வரை நீடித்துக்கொண்டிருக்கிறது. ஆங்கிலவழிப் பள்ளிகளும் வணிக அளவில் பெருகி வருகின்றன.

### மும்மொழி மயக்கம்! ஒன்றிய அரசின் தயக்கம்!

அலுவல் மொழி இந்தி என்று தொடங்கி, இணைப்பு மொழி என்று தொடர்ந்து, வளத்துக்கான மொழி இந்தி என்று வற்புறுத்தி, வேலை வாய்ப்புக்கான மொழி என்று விரிவுபடுத்தி, வாழ்வுக்கான மொழி என்று விளக்கம் அளித்துப் பரப்புரை செய்து வந்தோர், இப்போது அனைத்தையும் துறந்து இந்திய மொழிகளில் ஏதாவதொன்று என்று தலைகீழ்ப் பாடம் எடுக்கின்றனர்.

இருந்தாலும், இவர்கள் முன்னெடுக்கும் அனைத்தும் முரண்பாடுகளுக்குள் சிக்கி நகைப்புக்குள்ளாகின்றன.

தேசியக் கல்விக் கொள்கையை ஏற்று மும்மொழிகளைக் கற்பித்தாகவேண்டும் என்று கடுமையாக நடந்துகொள்ளும் பா.ச.க. ஒன்றிய அரசு, அவர்கள் நடத்தும் பள்ளிகளிலேயே தேசியக் கல்விக் கொள்கையின் அடிப்படைகளைப் பின்பற்றி வழிகாட்டவில்லை என்ற முரண்பாட்டினைக் காணலாம். ஆங்கிலம், தாய் மொழி ஆகிய இரண்டுக்கும் மேலாக, மூன்றாவதாக இந்தி அல்லது இந்திய மொழியில் ஒன்று என்பதுதான் தேசியக் கல்விக் கொள்கை வகுத்துக் கொடுத்துள்ள வரையறை அல்லது விதி. ஆனால், அத்தகையதொரு நடைமுறை ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பள்ளிகளில் பின்பற்றப்படவில்லை என்பதுதான் உண்மை நிலை.

1. ஒன்றிய அரசு சார்ந்த நடுவண் இடைநிலைக் கல்வி வாரியப் பாடத் திட்டத்தில் நடத்தப்படும் பள்ளிகளில் (CBSE) இந்தி மட்டும்தான் மூன்றாவது மொழியாக இருக்கிறது. மூன்றாவது மொழியாக இந்தி அல்லது இந்திய மொழிகளில் ஒன்று என்ற விருப்ப வாய்ப்பு இன்று வரை மாணவர்களுக்கு வழங்கப்படவில்லை.
2. ஒன்றிய அரசின் நவோதயா பள்ளிகளில் மூன்றாவது மொழியான இந்திக்கு மாறாக இந்திய மொழிகளில் ஒன்று என்ற விருப்பத் தேர்வு எந்த மாணவருக்கும் இதுவரை தரப்படவில்லை.
3. பிரதமர் மேனிலைப் பள்ளிகளில் இந்தியல்லாமல் வேறொரு இந்திய மொழிப் பாடத்தை மூன்றாவதாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை இல்லை.
4. கேந்திரிய வித்யாலயம் என்ற பெயரில் ஒன்றிய அரசு நடத்தும் பள்ளிகளிலும் இந்தியை மறுத்து வேறொரு இந்திய மொழியினைப் படிப்பதற்கான நிலை உருவாக்கப்படவில்லை.
5. தேசியக் கல்விக் கொள்கை முன்மொழிகின்ற தாய் மொழிக் கல்வி என்ற நிலையும் ஒன்றிய அரசு சார்ந்த பள்ளிகளில் நடைமுறையில் இல்லை. அதாவது, ஒன்று முதல் 5 ஆம் வகுப்பு வரை தாய்மொழிக் கல்வி என்பது நடைமுறைப்படுத்தப்படவில்லை. தமிழகத்தில் உள்ள ஒன்றிய அரசு சார்ந்த பள்ளிகளில் ஒன்று முதல் அய்ந்தாம் வகுப்பு வரை பயிற்சி மொழியாகத் தமிழ் அறிமுகப்படுத்தப்படவே இல்லை.

இவ்வாறு, தேசியக் கல்விக் கொள்கையின் பரிந்துரைகள் ஒன்றிய அரசின் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இன்று வரை உள்ளடக்கப்படவில்லை. நவோதயா பள்ளிகள், பிரதமர் மேனிலைப் பள்ளிகள், கேந்திரியப் பள்ளிகள் ஆகியனவும் தேசியக் கல்விக் கொள்கையை மதிக்கவுமில்லை, பின்பற்றவுமில்லை.

ஒன்றிய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கும் பள்ளிகளே தேசியக் கல்விக் கொள்கைக்கு மாறாக நடந்துகொண்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாடு அரசின் பாடத் திட்டத்தில் படிக்கும் மாணவர்கள் மட்டும் தேசியக் கல்விக் கொள்கையை ஏற்கவேண்டும் என்று ஒன்றிய அரசு வற்புறுத்துவது எப்படி முறையாகும் என்று தெரியவில்லை.

பா.ச.க. அரசின் தொடர் நடவடிக்கைகள் யாவும் உள்நோக்கம் கொண்டவையாகத் தெரிகின்றன. நிதி மறுப்பில் தொடக்கி, பல்வேறு நிலைகளில் தமிழகம் புறக்கணிக்கப்பட்டு வருவதைக் காணலாம். தமிழ்நாட்டை வஞ்சிக்கவேண்டும், தனித்தியங்கும் தமிழ்ப் பண்பாட்டினைச் சீர்குலைக்கவேண்டும் என்ற மனப்போக்கின் மறுவடிவமாக இப்போது மும்மொழிக் கொள்கை முன்னிறுத்தப்படுகிறது என்றுதான் கருதவேண்டியுள்ளது.

### புத்தகப் புழுவாக்கவா கல்வி?

தமிழ்நாட்டு மக்கள் தெளிவுடன் இருக்கிறார்கள். 1967 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 58 ஆண்டுகளாக அவர்கள் பட்டறிவில் மூன்றாவது மொழி வேண்டியதில்லை என்பதைப் புரிந்துவைத்துள்ளனர். மூன்றாவதாக ஒரு மொழியினைப் படிப்பதால் அன்றாட வாழ்வில் எத்தகைய பயனும் இல்லை என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் மட்டுமின்றி, இங்கே வந்து வாழ்வோரும் அறிந்துகொண்டுள்ளனர்.

வெளிப்படையாகக் கூறினால், தமிழ் அல்லது தாய் மொழி மற்றும் ஆங்கிலம் ஆகியவையன்றி வேறு எந்த மொழியையும் மூன்றாவதாக மக்கள் விரும்பிப் படிக்க எண்ணுவதில்லை. அறிவியல் மற்றும் கணக்கு அல்லது மேல்நிலைக் கல்விக்குச் செல்லப் பயன்படும் வணிகவியல், கணினியியல் போன்ற பாடங்களில் மட்டுமே ஆர்வம் காட்டுகின்றனர்.

மொழி என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால், பயிற்று மொழியாக ஆங்கிலம் இருக்கவேண்டுமா அல்லது தமிழ் போதுமா என்பது குறித்து ஆழமாக நோக்குகின்றனர்.

தொடர்புக்கு : 9444075561

# சிம்பொனியும் இளையராஜாவும்



மு.வீரபாண்டியன்

**மேற்கு இசைவுலகின் உச்சம் சிம்பொனி இசை என்கிறார்கள் இசை வல்லுநர்கள். சிம்பொனி என்பது கிரேக்கச் சொல். சேர்ந்திசை என்பது இதன் பொருள் ஒத்திசைப்பது என்றும் பொருள் கொள்ளலாம்.**

சிம்பொனி இசையில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உலகம் முழுவதும் அறியப்பட்டாலும் பீதோவன் மொதாம் போன்ற இசை வல்லுனர்களை நெருங்க முடியவில்லை. சாய்தாஸ்தாவேஸ்கி போன்ற மேதைகள் இன்னும் உச்சம்.

இளையராஜா 1986 களில் ஒளடு நேம் (How to Name) என்று ஒரு சிம்பொனிக்கான இசைக் குறிப்புகளைக் கொடுத்தார். அவரது இசைப் பாகங்களில் தமிழ் நாட்டுப்புற இசை கர்நாடக இசை, இந்துஸ்தானி மேற்கு இசை என யாவும் கலந்து இழையோடியதால் அதனை சிம்போனி என ராயல் இசைக் குழுவினர் ஏற்கவில்லை. ராயல் இசைக் குழு மேற்கு இசை உலகின் குறிப்பாக இங்கிலாந்தில் அவர்கள்தான் இசைத் தூதுவர்கள். கடவுள் அவர்களுக்கு அளித்த இசைக் கொடைதான் சிம்பொனி என்பது இவர்கள் கருத்து. ஆசியா ஆப்பிரிக்கா எனப் பல பகுதிகளிலிருந்து சிம்பொனி இசை முயற்சிகள் தொடர்ந்தாலும், ஐரோப்பிய இசை அறிவுக்கு, ஆசியாவோ ஆப்பிரிக்காவோ பொருத்தமில்லை என்பது ஐரோப்பிய இசை ஆணவம்! கிழக்கு உலக நாடுகளின் இசை முயற்சிகளைக் கூட அவர்கள் அங்கீகரிப்பது இல்லை.

இத்தகைய சூழலில் லண்டன் அப்பல்லோ அரங்கில் நுழைவதே மிகக் கடினம். முன்னர் நத்திங் பட் விண்ட் என்று மேற்கு இசையில் திருவாசகத்தை இளையராஜா இசைத்தபோது மேற்கு உலகம் முகம் சுளித்தது. தமிழ் இசையின் தொன்மையை, அதன் சிறப்புகளை மேற்கு உலகம் இன்னமும் அறியவில்லை. தமிழிசை மரபு மிக மிக செவ்வியல் தன்மை கொண்டது. தொல்காப்பியர் காலம் பாபநாச காலம் என அதன் இசைக் காலங்கள் மிக அலாதியானவை. நெய்தல், முல்லை, பாலை, மருதம் எனத் தமிழ் நிலப்பரப்புகளில் இசை வளர்ந்தோங்கி இருந்தது. யாழ், கொம்பு, பறை, மேளங்கள் எனத் தமிழ் இசை வளர்ந்த வண்ணம் இருந்தது.

பாண்டியர் காலங்களில் மதுரையில் தமிழ் இசை கோவலன், கோப்பெரும் தேவி, மாதவி என அனைத்துக் காலங்களிலும் இசை வளர்ந்த வண்ணம் இருந்தது. தஞ்சையும் இசை வளர்த்த இடம்தாம் மாரிமுத்து பிள்ளை அருணாச்சல கவிராயர் முத்து தாண்டவர் தமிழ் இசை வளர்த்தனர். ஆப்ரகாம் பண்டிதர், கர்ணாமிர்த சாகரம் என்ற இசைக் காவியத்தை எழுதி இருக்கிறார். இதில் சேர்ந்திசைக் குறிப்புகள் உள்ளன. மொகஞ்சதாரோ ஹரப்பா அகழாய்வுகளில் தமிழர்களின் இசைக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. போர்க்காலங்களில் சேர்ந்து இசை ஒலி எழுப்புவது, போர் வெற்றிகளில் சேர்ந்து இசை ஒலிப்பது விழாக் காலங்களில் சேர்ந்து நடனம், இசை என்பது தமிழின் நீண்ட மரபு சார்ந்தது. நா.வா ஆய்வுகளில் இதனைக் காணலாம்.

தமிழ்நாட்டில் எம்.பி சீனிவாசன் சேர்ந்திசையில் புதுப்புது அம்சங்களை மேற்கொண்டார். சேர்ந்திசையில் சர்வதேச கீதம் இசைத்தார். விஸ்வநாதன் – ராமமூர்த்தி, கே.வி.மகாதேவன் துவங்கி இன்றுள்ள ஏ.ஆர்.ரகுமான் வரை மேற்கத்திய இசைக் கருவிகளைக் கொண்டு சேர்ந்திசை முயற்சிகளை தங்கள் இசைகளில் இசைத்துள்ளனர். ஆனால் இவை அனைத்தையும் உள்வாங்கி சேர்ந்திசையின் உச்சமாக இளையராஜா சேர்ந்திசை என்னும் சிம்பொனி இசைத்துள்ளார். வேலியட் என்று இதற்குப் பெயர். கிழக்கின் திசைகளை அவ்வளவாக எப்போதும் மதிப்பதில்லை மேற்கு திசைகள். ஆனால் திசையாவும் அதிரச் செய்துவிட்டார் இந்த இசை மேதை. பண்ணைபுரம் சின்ன கிராமம். பாவலர் வரதராஜன், கங்கை அமரன் என முன்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மேடைகளில் இயக்கப் பாடல்களை முழங்கினர். தமிழிசை மரபுகளில் கற்றது போல் இளையராஜா தனது சகோதரர் பாவலர் வரதராஜன் அவர்களிடம் கற்றது ஏராளம்.

இளையராஜா வாகை சூடட்டும். நூற்றுக்கு மேற்பட்ட இசைக்கருவிகள் வயலின், கிடார், செலோ, டிரம்ப், புலூட் என நூற்றுக்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்கள் அவர்கள் யாவரும் பிரிதொரு மொழி இவர்களை ஒருங்கிணைக்கும் இளையராஜா தமிழ் மொழி.

இசைக்கு மொழி இல்லை, நாடும் இல்லை, சாதி மதங்களும் இல்லை. இசை சர்வதேச மொழி. அதன் உச்சம் தொடுகிறார் இளையராஜா. வாழ்த்துகள். இந்திய இசையில் ராகங்கள் பதினாறு, சுரங்கள் ஏழு.

தியாகராஜ சுவாமி, முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி புதிய ராகங்களையும் புதிய சுரங்களையும் தேடியதாகக் கூறுவார்கள். ஆனால், இளையராஜா இதுவரை இல்லாத ராகங்களையும், சுரங்களையும் உருவாக்கி விடுகிறார் போல் தெரிகிறது.

முதல் மரியாதை திரைப்படத்தில் ஒரு பாடல். ‘அந்த நிலாவத்தான் நான் கையில புடிச்சேன் என் ராசாவுக்காக’. இது ஒரு ராகம். இடையில் ஒரு குரல் இது ஒரு ராகம். ‘எங்க எங்க கொஞ்சம் நாம் பார்க்கிறேன்’ இது ஒரு ராகம். ‘கண்ண மூடு கொஞ்சம் நா காட்டுறேன்’ இது ஒரு ராகம். நாலு வார்த்தைகளில் நான்கு ராகம் இசைக்கும் திறன் எல்லோருக்கும் வாய்ப்பதில்லை. இளையராஜாவுக்கு இசை வாய்ப்பது மட்டுமல்ல இளையராஜா இசையாகவே வாய்த்திருக்கிறார். இந்த இசை இசை உலகை வெல்கிறது.

திசையெங்கும் மகிழ்ச்சி!






**இசைஞானி இளையராஜாவின் அரசியல் நகர்வில் நமக்கு உடன்பாடில்லை. ஆனால் அதற்காக, அவரது இசை மேதைமையை தமிழ்ச் சமூகம் கொண்டாடாமல் விடக்கூடாது. இசை சாதியை அடித்து நொறுக்கியிருக்கிறது.**

# தமிழக மொஸார்ட் இளையராஜா

**இளையராஜா லண்டனில் Valiant நிகழ்ச்சியில் அற்புதம் செய்திருக்கிறார் என்ற செய்தி பரவலாகக் கவனம் பெற்றிருக்கிறது.**

இந்திய இசையில் இந்த சிம்பொனி புதிதானதா என்றால் இல்லை ஏற்கெனவே பண்டிட்ஜிக்கள் உஸ்தாத்துகள் முயன்று பண்ணி யிருக்கிறார்கள். கூட்டிசை, சேர்ந்திசை நமக்கு இணக்கமானதே. தன் சினிமாப் பாடல்களிலும் சிம்பொனிக் கூறுகளை இளைராஜா இணைத்திருக்கிறார். ராஜாவின் திருவாசகம்‘ என்ற சிம்பொனி பிரபலமாகாமல் போனதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. இளையராஜாவின் ரீதிகௌளையில் “சின்னக் கண்ணன் அழைக்கிறான்’ போன்ற சினிமா இசையும் ஓரளவு சிம்பொனிதான். அவரது திரையிசையில் விழுகின்ற சிம்பொனியின் கூறுகள் அவரது ஆசை வெளிப்பாடுதான். அண்மையில் வயலின் புல்லாங்குழல், ஹார்மோனியம், தவில், மிருதங்கம், சாக்ஸ்ஃபோன் வீணை கடம் சூழ ‘அபராதமுல நோர்வே ஸமய” வராளியில் திருவையாற்றில் ஒருவர் பாடினார். இது கூட்டிசையோ என ஒரு ஐயம் வந்தது. இல்லை முரணான சுருதிகொண்ட வாத்யக் கலவையாகவும் கருதலாம். இவ்வாறான கருத்துகள் தாண்டியது சிம்பொனி. இளையராஜா இதையும் தாண்டியவர். ஏற்கெனவே வரையப்பட்ட எல்லா மரபிசை இலக்கணங்களை மீறியதுதான் சிம்பொனி. இளையராஜாவின் கனவு. அதற்கு வடிவம் கொடுப்பது. ஆர்க்கெஸ்ட்ராவின் வெகு நுட்பமான வடிவம். தமிழில் உழைக்கும் மக்கள் சேர்ந்து பாடும் நடவுப் பாடல்கள், திருவையாறு தியாகராஜ ஆராதனையில் பாடும் பஞ்சரத்தினக் கீர்த்தனைகள் சிம்பொனி வகையா? நிறைய விளக்க வேண்டும்.

கிருத்துவ தேவாலயங்களில் இசைக்கப்படும் பிரார்த்தனைக் கீதங்கள் பெரும்பாலும் கதனகுதூகலச் சாயல்தான். கதனகுதூகலம் சிம்பொனியில் பிரதானப் பங்கு இருக்கலாம்.நான்கு நிலைகளில் சிம்பொனி உருக்கொள்ளும். ராயல் பிலார்மோனிக் இளையராஜாவை நம்பி களத்தில் இறங்கி இருப்பதற்குக் காரணம். இளையராஜாவின் ‘மனோ தர்மம்’ ராஜாவிற்கு வயலின் பிராதானம். ஒரேநேரத்தில் ஷெனாய் வாத்தியத்தை ஊடுருவ விட்டுவிட்டு தாளத்தோடு mythmic ஆகி இசைக் கோவையைத் தொடுப்பது counterpoint.பியானோவின் வழக்கமான நுழைவும் அழகு. இங்கே ராஜாவை எல்லா வாத்யங்களும் சூழ்ந்து சிநேகம் கொள்ளும்.

வயலின் இடையிடையே அழகாக ஆக்கிரமிக்கும்.ஒரு ரசிகனின் பார்வை இப்படியானதுதான்.

மேற்கத்திய இசை, நாட்டுப்புற இசை, இந்துஸ்தானி இசை, கர்னாடக இசைக் கூறுகளை இணைத்தல் இளையராஜா என்ற இசை மகாராஜாவால்தான் முடியும். மாதக்கணக்கில் வரையப்படும் இசைக்குறிப்புகளை நிமிஷங்களில் எழுதி முடிக்கும் ஆற்றல் லண்டனில் கொண்டுபோய் நிறுத்தியிருக்கிறது.

ராஜா இசையாலானவர். சிம்பொனியைத் தமிழ்ப் பிரதேசத்திற்கு நகர்த்தியவர் என்று கர்வம் கொள்வோம். மேற்கத்திய இசைக்களம் ஹங்கேரியை மையப்படுத்திய சங்கப் பலகை. ராஜா கம்பீமாக இடம்பிடித்து அமர்ந்து விடுகிறார்.

இளையராஜா திருப்தியுறவில்லை. உயர் கலைஞருக்குத் திருப்தி என்பதே கிடையாது. இதன் விளைவுதான் ராஜாவின் Valiant. மொஸார்ட், பீத்தோவன் சாய்கோஸ்க்கி வரிசையில் இனி நம் இளையராஜா இடம்பிடிப்பார்.ராஜ லஹரி.ஜோஸப் பைடன். இளையராஜா நொடேஷன்கள் 100 சதவீத பிரமிப்பை ஏற்படுத்துவதாக உலக இசையாளுநர்கள் கருதுகிறார்களாம். இசை சாதியை அடித்து நொறுக்கியிருக்கிறது. சிம்பொனி விளக்குவதன்று. ‘அனுபவிப்பது’ ராஜாவின் சிம்பொனியோ மேலும் மேலும் அனுபவிப்பது. அது அவரே சொன்னது. Beyond perfection என்பதுதான். பிறப்பிடம் கொண்டாட்டத்திற்குரியது.

வாழ்க இசை ராஜா.

நா.விச்வநாதன்

# கே.சுப்பராயன் எம்.பி.யின் இடைவிடாத முயற்சி வெற்றி 1 ஆம் பக்க தொடர்ச்சி

“அவையில் நடைபெறும் விவாதங்கள், கேள்வி நேரம் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளிலும் இருவழி மொழிபெயர்ப்பு அவசியம். மக்களால் தேர்வு செய்யப்பட்டு வரும் பிரதிநிதிகள், மொழித் தடையின் காரணமாக, தான் பேச நினைப்பதைப் பேசி, ஆற்ற வேண்டிய கடமையிலிருந்து தடுக்கப்படுவதை இன்னும் தொடரக்கூடாது. இதற்கு முன்பும் நாடாளுமன்றத்தில் பலமுறை இது பற்றி விவாதங்களில் பேசியிருக்கிறேன்.

இப்போது 22 மொழிகளில் எதில் வேண்டுமானாலும் பேச முடியும் என்ற நிலை வந்திருக்கிறது. ஆனால் எதில் பேசினாலும் இந்தியிலோ, ஆங்கிலத்திலோ மட்டுமே தான் மொழிபெயர்க்கப்படுகிறது. இது ஒருவழிப் பாதை ஆகும். இந்த இரண்டு மொழிகளும் தெரியாத மக்கள் பிரதிநிதி, நாடாளுமன்றத்தில் என்ன பேசப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளவும், தலையீடு செய்யவும் இயலாதவராக முடக்கப்படுவது சரியல்ல. ஞானமும், அறிவும், அனுபவமும் இருந்தும், புரியாத மொழியில் பேசுவதால், அந்த உறுப்பினர்கள் தமது சரியான பங்களிப்பை தர இயலாத நிலை ஏற்படுத்தப்படுகிறது. இது அந்தப் பிரதி நிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய மக்களுக்கும், ஜனநாயகப் பண்பாட்டுக்கும் இழைக்கப்படும் துரோகமாகும்.”

“அரசியல் சாசனத்தின் 120வது பிரிவு, ஆங்கிலம் மற்றும் இந்தியை நன்கு அறிந்திடாத எம்.பி.க்கள் தங்களது தாய் மொழியில் பேசலாம் என உறுதிப்படுத்துகிறது. ஆனால் 70 ஆண்டுகள் கடந்த பின்னும் அதை நிறைவேற்றவில்லை. இன்றுள்ள சூழலில் நாடாளுமன்றத்தில் நடப்பது அனைத்தையும் புரிந்து கொள்ளவும், தாமும் பங்கேற்கவும் வழி செய்வது அவசியமானது. இந்திய நாட்டைப் போலவே, இந்திய நாடாளுமன்றமும் பல மொழிகளில் இயங்கியாக வேண்டும்.

தொழில்நுட்பம் மிக வேகமாக வளர்ச்சி பெறும் இன்றைய காலத்தில், அரசியல் சாசனம் பட்டியலிட்டுள்ள 22 மொழிகளிலும் மொழிபெயர்த்து தருவது ஒன்றும் கடினமான செயல் அல்ல. இரு வழி மொழி பெயர்ப்பைத் தர வேண்டும் என்று அரசு முடிவு செய்துவிட்டால், அதை தொழில்நுட்ப வல்லுனர்களைக் கொண்டு நிறைவேற்றிவிட முடியும். நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள், அரசியல் சாசனப்படி தமது கடமைகளை நிறைவேற்ற அவர்களுக்கு முழு சுதந்திரமும், வெளியும் உருவாக்கித் தருவது இன்னும் தள்ளி போட முடியாததாகும்” என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தி இருக்கிறார்.

2021 மார்ச் மாதம் 9ம் தேதியன்று பிரதமர் அலுவலகத்தில் இருந்து ஒரு கடிதம் நாடாளுமன்ற விவகார துறைக்கு அனுப்பப்பட்டு, அதன் நகல் சுப்பராயனுக்கு தரப்படுகிறது. “இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கே.சுப்பராயன் கடிதம் அனுப்பி இருக்கிறார். இதனை நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் அவர்களின் பார்வைக்கு வைக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ள நான் பணிக்கப்பட்டுள்ளேன்” என்று அந்த கடிதம் கூறுகிறது. எவ்வளவு தகிடுதத்தமான எழுத்து நடை பாருங்கள்! அந்தக் காகிதம் பூராவும் பல மேசைகளுக்கு அது நகர்த்தப்பட்டதன் அடையாளமாக பல கையெழுத்துக்கள் உள்ளன.

2021 மார்ச் 17 ஆம் நாள், கே சுப்பராயன் கடிதத்திற்கு நாடாளுமன்ற விவகாரத்துறை செயலாளர் ஆர்.எஸ்.சுக்லா பதில் தருகிறார். பிரதமர் அலுவலகம் தன்னிடம் தள்ளிவிட்ட பொறுப்பை, இவர் மக்களவை செயலகத்திற்கு தள்ளி விடுகிறார்.


“நீங்கள் கூறியுள்ள விவரங்களை நிறைவேற்றித் தர வேண்டியது, மக்களவைச் செயலகத்தினுடைய நிர்வாக வேலை என்பதால், பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அவர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறோம்” என்று கூறி, மக்களவைச் செயலகத்துக்கு அனுப்பிய கடிதத்தின் நகலையும் இணைத்து இருக்கிறார்.

அதோடு சரி. விஷயம் கிணற்றில் போட்ட கல்லாக இருப்பதைக் கண்டு, கே. சுப்பராயன் எம்.பி மீண்டும் வினாக்கணை தொடுக்கிறார்.

2021 அக்டோபர் 8ம் தேதி அன்று, மீண்டும் பிரதமருக்கு ஒரு கடிதத்தை அவர் எழுதுகிறார். மேலேசொன்ன கடிதங்களை எல்லாம் குறிப்பிட்டு விட்டு, “நடவடிக்கை எடுக்கப்படுவதாக சொல்லப்பட்டுள்ளது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, உள்கட்டமைப்பு உருவாக்கப்படவும் இல்லை. அடுத்த நாடாளுமன்ற கூட்டத்தொடர் துவங்குவதற்குள் கட்டமைப்பை உருவாக்கி 22 மொழிகளிலும் இரு வழி மொழி பெயர்ப்பை துவக்க வேண்டும்” என்று அந்த கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதன் நகல், நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது.

2021 அக்டோபர் 20 ஆம் நாள் அன்று, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி, ஒரு கடிதம் எழுதி, உங்கள் கடிதத்தை நான் பெற்றுக் கொண்டேன் என்று ஒப்புகை தருகிறார். அவ்வளவே!

2021 டிசம்பர் 28ஆம் தேதி அன்று மக்களவை செயலகத்தில் துணைச் செயலாளர் சவுதா காலியா தந்துள்ள பதிலில்,


डा. सत्य प्रकाश
DR. SATYA PRAKASH

अपर सचिव
संसदीय कार्य मंत्रालय
87, संसद भवन
नई दिल्ली -110001
ADDITIONAL SECRETARY
MINISTRY OF PARLIAMENTARY AFFAIRS
87, PARLIAMENT HOUSE,
NEW DELHI-110 001

D.O. No.F. 4(3)/2018-Leg.I

Dated: 13th April, 2022

Respected Sir,

Please refer to your communication dated 23.02.2021 addressed to Hon'ble Prime Minister regarding adequate and appropriate infrastructure in the Lok Sabha for real-time two-way interpretation in 22 languages included in the Schedule 8 of the Constitution.

2. I would like to inform that Lok Sabha Secretariat have requested concerned authorities in the Secretariat for creation of adequate and appropriate infrastructure in Lok Sabha for real time two-way interpretation of all the 22 languages in schedule 8 of the Constitution. They have also informed that requisition of necessary manpower augmentation to facilitate real time two-way interpretation is also being taken up by them. (copy enclosed)

With regards,

Yours sincerely,

(Dr. Satya Prakash)

Shri K. Subbarayan,
Member of Parliament,
Lok Sabha



# ஆர்எஸ்எஸ்சும், பாஜகவும் பாசிஸ்டுகளே!

## கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் திட்டவட்டம்

மத நம்பிக்கையைப் பயன்படுத்தி வகுப்புவாத வெறுப்பைப் பரப்பி வரும் பாசிச சக்திகளின் பிடியிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் அழைப்பு விடுத்துள்ளார்.

கேரள மாநிலம் கோழிக்கோடில் பகுத்தறிவாளர் யு.கலநாதன் நினைவுநாள் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் கலந்துகொண்டு உரையாற்றினார். அப்போது, “இந்தியாவை மதகுருமார் ஆட்சி முறையிலான (Theocratic State) நாடாக மாற்றும் முயற்சியில் பாஜக ஈடுபட்டுள்ளது. இதற்கு, அயோத்தி ராமர் கோயில் குடமுழுக்கு அல்லது ‘பிரான பிரதிஷ்டை’யின் போது பிரதமர் நரேந்திர மோடி முக்கிய ‘பூசாரி’யாகப் பங்கேற்றதே சான்றாகும்.




இத்தாலியில் பெனிட்டோ முசோலினி தலைமையிலான பாசிஸ்டுகளும், ஜெர்மனியில் அடால்ஃப் ஹிட்லர் தலைமையிலான நாஜிக்களும் பின்பற்றிய அதே பாசிஸ்ட் பாதையைத்தான் ஆர்எஸ்எஸ், பாஜக பின்பற்றுகிறது. அவர்களைப் போன்றே வகுப்பு வாதத்தைத் தூண்டி அரசியல் ஆதாயம் அடைவதுடன், கார்ப்பரேட் நிறுவனங்கள் பெரும் லாபமீட்ட வழியமைத்துக் கொடுத்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் இந்தியாவில் இருப்பது முழு பாசிசமா? நவ பாசிசமா அல்லது அரை பாசிசமா? என்று சிலர் விவாதித்து வருகின்றனர்.

பாசிசம் என்பது வதை முகாம்கள் மற்றும் எரிவாயு சூளைகளுடன் மட்டும் தொடர்புடையது அல்ல. கும்பல் படுகொலைகள், மத வெறுப்பு, வழிபாட்டுத் தலங்களை அழித்தல், பாலியல் வன்முறை போன்ற நவீன அடையாளங்களும் பாசிசத்துக்கு உரியவையே.

மக்களின் மத நம்பிக்கையைப் பயன்படுத்தி, அவர்களிடம் வகுப்புவாத வெறுப்பை பாசிச சக்திகள் ஊட்டிவருகின்றனர். இந்தப் பாசிச சக்திகளின் பிடியிலிருந்து கடவுள் நம்பிக்கையாளர்கள் விடுவித்துக்கொள்ள, அவர்களுக்கும் பகுத்தறிவாளர்களுக்கும் இடையே தொடர்புகளும் இடையீடுகளும் தேவைப்படுகின்றன” என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலச் செயலாளர் பினாய் விஸ்வம் உறுதிபடத் தெரிவித்தார்.

– இளமதி

## 16 மொழிகளில் மொழிபெயர்க்க வசதி



2025 பிப்ரவரி 11ஆம் நாள் அன்று மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா வெளியிட்ட அறிவிப்பு:

நாடாளுமன்றத்தில் இனி போடோ, டோக்ரி, மைதிலி, மணிப்பூரி, உருது மற்றும் சமஸ்கிருதம் உள்ளிட்ட ஆறு புதிய மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு சேவைகள் விரிவுபடுத்தப்படுகின்றன. இந்தி மற்றும் ஆங்கிலம் தவிர, அசாமி, பெங்காலி, குஜராத்தி, கன்னடம், மலையாளம், மராத்தி, ஒடியா, பஞ்சாபி, தமிழ் மற்றும் தெலுங்கு ஆக பத்து மொழிகளோடு இவற்றையும் சேர்த்து 16 மொழிகளில் இனி மொழிபெயர்ப்பு உறுப்பினர்களுக்குக் கிடைக்கும்.

அரசியல் சாசனத்தில் எட்டாவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளிலும் இரு வழி மொழிபெயர்ப்பை மேற்கொள்வதற்காக பொருத்தமான உள்கட்டமைப்பை மக்களவையில் ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிக்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

ஒரு வழியாக கோரிக்கை ஏற்கப்பட்டது, அதனை நிறைவேற்ற நடவடிக்கைகள் துவங்கப்பட்டு விட்டன என்பதைக் கடிதம் கோடிட்டுக் காட்டுகிறது.

2022 ஏப்ரல் 13ஆம் தேதி அன்று, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சகத்தின் கூடுதல் செயலாளர்



டாக்டர் சத்திய பிரகாஷ், கே சுப்பராயன் எம்பிக்கு மீண்டும் கடிதம் எழுதுகிறார்.

ஒன்றிய அரசிடமிருந்து வரும் எல்லா கடிதங்களிலும், சுப்பராயன் எம்பியின் கடிதத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் எல்லாவற்றையும் அவர்களும் திரும்பச் சொல்லி இருப்பார்கள். ஆனால் அதன் மீது என்ன செய்யப் போகிறோம் என்பதுதான் திட்டமான சொற்களில் இருக்காது.

ஆனால் இந்தக் கடிதத்தில், கதை எல்லாம் சொல்லிவிட்டு கடைசியாக, அரசியல் சாசனத்தின் எட்டாவது அட்டவணையில் கண்ட 22 மொழிகளிலும் இரு வழி மொழிபெயர்ப்பு மேற்கொள்வது சம்பந்தமாக மக்களவை செயலகம் சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தேவையான பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு கூறியிருப்பதாக உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். அதற்கான கட்டமைப்பை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து அவர்கள் ஒரு கடிதமும் எழுதி இருக்கிறார்கள் என்று சொல்லி, அதன் நகல் அனுப்பப்படுகிறது.

2023 அக்டோபர் 27ல் கே.சுப்பராயன் எம்.பி, நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சருக்கு மீண்டும் கடிதம் எழுதுகிறார்.

அதில் மக்களவை செயலகத்தின் கூடுதல் செயலாளர் தனக்கு எழுதிய கடிதத்தில், 22 மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கான ஆயத்த நடவடிக்கைகள் துவங்கி விட்டதாக கூறியிருந்த போதிலும், அந்த திசையில் எதுவும் செய்யப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

திரும்பத் திரும்ப இந்த விஷயத்தை வலியுறுத்தி வருவதை எடுத்துக்காட்டியதோடு, "அவையில் விவாதிக்கப்படும் அனைத்தையும் அவை உறுப்பினர் அறிந்திருப்பதுதான் ஜனநாயகத்தின் அடித்தளமாகும். 75 ஆண்டுகளாக இதனை செய்யாமல் இருப்பது பெரும் தோல்வியாகும். இப்போதாவது இது சரி செய்யப்பட வேண்டும்.

புதியமக்களவைகட்டிடம்கட்டி முடித்துதுவக்கப்பட்டு விட்டது. "விடுதலையின் அமுதப் பெருவிழா" என அரசு கொண்டாடும் இந்த நேரத்தில், அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்ப்பதற்கான அரசியல் சாசன ஆணை நிறைவேற்றப்பட்டாக வேண்டும். உடனடியாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்'' என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

2023 டிசம்பர் 18ஆம் நாள், நாடாளுமன்ற விவகார துறை அமைச்சகத்தில் கூடுதல் செயலாளர் டாக்டர் சத்திய பிரகாஷ், மக்களவை செயலகத்தின் பொதுச்செயலாளர் உத்பல் குமார் சிங் என்பாருக்கு எழுதிய அலுவலக கடிதத்தில், கே சுப்பராயன் எம்.பியின் கடிதத்தை சுட்டிக்காட்டி, "எது பொருத்தமானதோ அதனை நிறைவேற்ற தேவையான நடவடிக்கை எடுக்குமாறு'' வழிகாட்டுகிறார்.

2023 டிசம்பர் 19ஆம் தேதியன்று, மேற்சொன்ன கடிதத்தை இணைத்து, நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சகத்தின் செயலாளர் உமாங் நருலா, கே சுப்பராயன் எம்பிக்கு கடிதம் எழுதுகிறார். அதில் மக்களவை செயலகத்தை தேவையான நடவடிக்கை எடுக்கக் கோரி கடிதம் அனுப்பி இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

18வது மக்களவைக்கான தேர்தல் 2024 இல் நடத்தப்பட்டு, திருப்பூர் தொகுதியில் இருந்து மீண்டும் கே.சுப்பராயன் தேர்வு செய்யப்படுகிறார். இதன்பின்பு, 22 மொழிகளிலும் ஒரே நேரத்தில் இருவழி மொழிபெயர்ப்பும் செய்வதற்கான நடவடிக்கையை அரசு துவக்குகிறது. இதற்கு நன்றி கூறி, விரைவில் செயல்பாட்டை துவங்குமாறு வலியுறுத்தி அடுத்த கடிதத்தை கே.சுப்பராயன் எம்.பி எழுதுகிறார்.

2024 ஜூலை 29ஆம் தேதி, பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதப்பட்ட அந்தக் கடிதம் பின்வருமாறு கூறுகிறது.

"இருவழி நிகழ்நேர மொழிபெயர்ப்பு தொடர்பான எனது இடைவிடாத வேண்டுகோள்கள் சாதகமாகக் கவனிக்கப்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். புதிய நாடாளுமன்றத்தில் உள்கட்டமைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் நாடாளுமன்ற அலுவல்களை ஒரே நேரத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் புரிகிற மொழியில் கொடுப்பது பொருள் பொதிந்த கடமையாகும். நாடாளுமன்ற அலுவல்களை உண்மையான அர்த்தத்தில் உள்ளடக்கியதாக ஆக்குகிறது. இந்த மிக மிக இன்றியமையாத ஏற்பாட்டை உறுதி செய்ததற்கு நன்றி.

அரசியல் சாசனத்தின் 8வது அட்டவணையின் கீழ் உள்ள 22 மொழிகளில், தற்போது எத்தனை மொழிகள் நிகழ்நேர மொழிபெயர்ப்புகள் கிடைக்கின்றன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்'' என்கிறது அந்தக் கடிதம்.

இரண்டு மொழிகளில் மட்டுமே பேசவும் கேட்கவும் முடியும் என்ற பழைய நிலையை உடைத்து எறிந்து, பிறகு எந்த மொழியில் பேசினாலும், ஆங்கிலம் ஹிந்தி ஆகிய மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் என்ற நிலைக்கு வந்து, இப்போது எந்த மொழியில் பேசினாலும் உறுப்பினருக்கு தெரிந்த மொழியில் அதற்கான மொழிபெயர்ப்பு உடனுக்குடன் கிடைக்கும் என்ற நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது.

தமிழில் பேசவும் கேட்கவும் மட்டுமல்ல, இந்திய அரசியல் சாசனம் அங்கீகரித்துள்ள அத்தனை மொழிகளிலும் ஒரே நேரத்தில் இரு வழி மொழிபெயர்ப்பு என்பதை கொண்டு வர கே.சுப்பராயன் எம்.பி எடுத்த நடவடிக்கைகள் இப்போது பயனளித்துள்ளன.

இந்தியை எல்லா இடங்களிலும் திணிப்பதற்கான நேரம் வந்துவிட்டது என்று பகிரங்கமாக பேசும் ஒரு அரசாங்கத்தை, திரும்பத் திரும்ப வலியுறுத்தி, நாடாளுமன்ற அலுவல்களை அனைத்து மொழிகளிலும் கேட்கவும், தனக்கு வசதியான மொழியில் பேசவும் உரிய கட்டமைப்பை உருவாக்க, இடைவிடாது முயற்சித்து வெற்றி கண்டுள்ள தோழர் கே.சுப்பராயன் எம்.பி அவர்கள் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

தமிழின் உன்னதம் பற்றியும், வேறு மொழியைத் திணித்து அதன் மீது தொடுக்கப்படும் தாக்குதல்கள் பற்றியும் விரிவாகப் பேசும் ஊடகங்கள், இடைவிடாது முயன்று பெற்றுள்ள இந்த வெற்றியைத் தமிழ்ச் சமூகத்திற்குக் கொண்டு சேர்ப்பது அவசியமானதாகும்.

**தொகுப்பு : டி.எம்.மூர்த்தி**

## மோடி ஆட்சியில் காணாமல் போகும் காடுகள்!



சில சுற்றுச் சூழல் ஆர்வலர்கள், மூத்த வழக்கறிஞர்கள் கோபால் சங்கர நாராயணன், பிரசாந்த் பூஷண் ஆகியோர் ஒன்றிய அரசு வனப் பாதுகாப்புச் சட்டத் திருத்தத்தின் கொடிய அம்சங்களின் மூலம் வன வளத்தை நாசமாக்குவது குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தனர். மாண்புமிகு நீதியரசர் கவாய் மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் அவர்களும் நீதிமன்றத்தின் கவனத்திற்கு வந்திருந்த ஒரு தகவல்அறிக்கை பற்றிக் கவனம் கொண்டு தங்கள் கருத்தைக் கூறினர்.

"2023 வனப் பாதுகாப்புச் சட்டத் திருத்தத்தின் வரையறை மூலமாக வனப் பகுதி ஏறத்தாழ 1,99,000 ஹெக்டேர் அளவிற்குக் குறைந்து போய், அது வன வளர்ச்சிக்கல்லாத பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.''

இதுகுறித்து உச்ச நீதிமன்றம் மாண்புமிகு நீதியரசர் கவாய் மற்றும் அகஸ்டின் ஜார்ஜ் கொண்ட அமர்வு 4 மார்ச் 2025 இல் கடுமையான சொற்களில் தனது ஆணையை வெளியிட்டது.

1. இப்போதிருந்து (மார்ச் 7, 2025) ஆறு மாதத்திற்குள், அனைத்து மாநில அரசுகளும், ஒன்றியப் பிரதேசங்களும் ஒரு வல்லுநர் குழுவை அமைத்து, "வனப் பகுதிகள்'' என்பதை மேற்பார்வை செய்து அந்தப் பதிவுகளை ஒன்றிய அரசின் மூலமாக நீதி மன்றத்திடம் சொல்ல வேண்டும். செய்யத் தவறினால், அந்தந்த மாநிலத் தலைமைச் செயலர்கள் மற்றும் நிர்வாகங்களின் மீது தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

1996 ஆம் ஆண்டு டி.என்.கோதவர்மன் ஒன்றிய அரசுக்கிடையே நடந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தந்த வழிகாட்டலின் பேரிலேயே "வனப்பகுதிகளைக்'' கண்டறிய வேண்டும்.

(இது 1980 அக்டோபர் இல் அரசு ஆவணங்களில் பதிவேற்றப்பட்ட "வனப்பகுதிகளை'' உறுதி செய்கிறது. ஜெய்ராம் ரமேஷ். (காங்கிரஸ்)

2. எங்கள் (உச்ச நீதிமன்றம்) மறு உத்தரவு வரும் வரையில் வனங்களின் அளவு குறையும் வகையில் எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளக் கூடாது. ஏற்கெனவே உள்ள சட்டப் பகுதியில் தரப்பட்டுள்ள விலக்கின்படி எவ்வளவு வனப் பகுதி எடுக்கப்படுகிறதோ அதன் சமமான அளவு வன விரிவாக்கத்திற்கு ஒன்றிய அரசோ அல்லது மாநில அரசுகளோ, ஏற்பாடு செய்யாமல் வனப் பகுதியைத் தொடக் கூடாது.

கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பிரகடனப்படுத்துவது போல சுரண்டும் வர்க்கம், நாட்டின் இயற்கை வளங்கள் உள்ளிட்ட எல்லா வளங்களையும் தமதாக்கிக் கொள்ள, கபளீகரம் செய்ய முயன்று கொண்டேதான் இருக்கும். வன வளம் என்பது ஒரு தனி வளம் அல்லவே அல்ல. அது, வனக் குடிகளின் வாழ்க்கைக்கான உத்திரவாதம், வன உயிர்களின் பாதுகாப்பு, வனத்தால் சுற்றுப்புறச் சூழலின் மேம்பாடு என எல்லாவற்றிற்கானதோர் இயற்கைக் கொடை. நாமாக உருவாக்கா முடியா விட்டாலும், இயற்கை தந்த கொடையைச் சுரண்டல்வாதிகள் கொள்ளையடித்துத் தாரை வார்ப்பதையாவது தடுக்கலாமே!

வாருங்கள் நாடு காக்கும் வன வளம் காக்கக் கருத்திணைப்போம், குரல் கொடுப்போம்!

**ராமானுஜம் : 9449826636**



தமிழ் மக்களை, 'நாகரீகமற்றவர்கள்' என்று மக்களவையிலேயே இழிவுபடுத்தினார் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திரா பிரதான்!

இதை, எந்த அமைச்சரும் தடுத்து நிறுத்தவில்லை, தட்டியும் கேட்கவில்லை!

இதுதான் மோடி அமைச்சரவையின் ஒரிஜனல் முகம்!
இதுவரை காட்டி நின்றது ஒப்பனை முகம்!
உப்புக்கற்கள் வைரமாகாது; ஊர்க்குருவிகள் பருந்தாகாது!

**கே.சுப்பராயன் எம்.பி**

# மீள முடியாத நெருக்கடியில் மேற்கத்திய வல்லரசுகள்

## டிரம்ப் – ஜெலன்ஸ்கி ‘மோதல்’ வெளிப்படுத்துவது என்ன?



வ.மணிமாறன்

**உக்ரைன் அதிபர் விளாதிமிர் ஜெலன்ஸ்கிக்கும் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் மற்றும் துணை அதிபர் ஜே.டி.வான்சுக்கும் இடையே கடந்த மாதம் நிகழ்ந்த ‘மோதல்’ பரபரப்பாகவும் அதிர்ச்சியுடனும் பார்க்கப்பட்டது.**

உக்ரைனில் உள்ள அரிய வகை கனிம வளங்களின் கட்டுப்பாட்டை அமெரிக்காவிடம் ஒப்படைக்க உடன்பாடு ஏற்பட்டுள்ளதாக அதிபர் டொனால்ட் டிரம்ப் கூறிவந்த நிலையில், இருநாட்டு அதிபர்களுக்கு இடையிலான ‘மோதல்’ பல்வேறு கேள்விகளையும் வியப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. எதிர்பார்த்த வெற்றியை உக்ரைனும் அதன் பின்னணியில் இருந்து போரை நடத்திக்கொண்டிருக்கும் மேற்கத்திய வல்லரசுகளும் பெற முடியவில்லை. இந்நிலையில், அமெரிக்கா சென்று அதிபராகப் பதவியேற்ற டொனால்ட் டிரம்ப்பை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி சந்தித்துப் பேச ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

திட்டமிட்டபடி அமெரிக்கா சென்றார் அதிபர் ஜெலன்ஸ்கி. அதிபர் டிரம்ப் அவரை வரவேற்று உபசரித்தார். ஆனால் இருநாட்டு அதிபர்களின் கணக்குகளும் வெவ்வேறானவை.

அரிய வகை கனிமங்களை எடுக்க வாய்ப்பளித்து, உக்ரைன் பாதுகாப்புக்கு உத்தரவாதமும் ஆயுதங்கள் மற்றும் நிதியுதவியை தொடர்ந்து பெறவும் திட்டமிட்டார் அதிபர் ஜெலன்ஸ்கி. ஆனால், இதுவரை ஆயுதங்களையும் நிதியுதவியையும் வாரி வழங்கியதற்கு ஈடாக உக்ரைனில் இருந்து அரிய வகை கனிமங்களை எடுப்பது அதிபர் டொனால்ட் டிரம்பின் திட்டம். அதுவும் கடந்த காலங்களைப் போன்று ‘தாராள மனப்பான்மை’யுடன் கனிமங்களை எடுப்பதற்கான உரிமையைப் பெற டிரம்ப் கணக்குப் போட்டார்.

### இருவேறுபட்ட நோக்கங்கள்

அமெரிக்காவில் இரண்டு அதிபர்களும் பேச்சு நடத்தினர். தங்களுடைய விருப்பங்களை ஜெலன்ஸ்கி முன்வைத்தார். இதனால் அதிர்ந்த டிரம்ப், வரலாற்றில் இதற்கு முன் நடந்திராத வகையில் பேசினார். காரசார விவாதம். சோகமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய நகைச்சுவை அங்கு அரங்கேறியது.

உக்ரைனில் போர் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும். அமெரிக்காவின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்காமல், நிதியையும் ஆயுதங்களையும் வாரி வழங்கி ஜோ பைடன் நடத்திக்கொண்டிருந்த போரில் இருந்து அமெரிக்கா விடுவிக்கப்பட வேண்டும் என்பதே தம்முடைய நோக்கம் என்று அதிபர் தேர்தல் பரப்புரையின் போதே டொனால்ட் டிரம்ப் கூறிவந்தார். அதே நிலைப்பாட்டைத்தான் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடனான சந்திப்பின் போதும் வெளிப்படுத்தினார். இது ஜெலன்ஸ்கியின் எதிர்பார்ப்புகளுக்கு மாறானது என்பதால், காரசார விவாதம் ஏற்பட்டது.

இந்தக் காட்சிகளைக் கண்ட பலரும், டிரம்ப் ஒரு கோமாளி, அமெரிக்காவை வீழ்த்த யாரும் தேவையில்லை டிரம்ப் ஒருவரே போதும் என நினைத்தனர். ஆனால் அவர் தேர்தல் பரப்புரையின் போது கூறியதையே தற்போதும் செயல்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் கடன் மிக அதிக அளவில் (36 டிரில்லியன் டாலருக்கும் மேல்) உள்ளது. அமெரிக்காவின் ஆயுத உற்பத்தி, இருப்பு சரிந்து வருகிறது. ஆசிய / பசிபிக் பிராந்தியத்திலும் மத்திய கிழக்கிலும் மோதல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளை எதிர்கொண்டுள்ளது. தற்போதைய சூழலில் அமெரிக்கா அதற்குத் தயாராக இல்லை. டொனால்ட் டிரம்ப் இதனைப் புரிந்துள்ளார். உலக அரங்கில் அமெரிக்காவின் மிகைத் தோற்றம் கலைந்துவிடக் கூடாது. மேல்நிலை வல்லரசாகவே தொடர வேண்டும் என நினைக்கிறார்.

இதனால் அமெரிக்காவின் முன்னுரிமைகளை மாற்ற விரும்புகிறார். அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் மாற்றம் கொண்டுவர நினைக்கிறார். மூன்று ஆண்டுகளுக்கு மேலாக உக்ரைனில் நீடிக்கும் போரில், ரஷ்யாவின் கை ஓங்கும் நிலையில் உள்ளது. பனிப்போர் காலத்தைவிட மோசமான அளவுக்கு அமெரிக்கா, ரஷ்யா இடையிலான உறவு இந்த மூன்று ஆண்டுகளாக முடங்கியுள்ளது. இதனால் அமைதிப் பேச்சு நடத்தி போரை முடிவுக்கு கொண்டு வருவதுடன், ரஷ்யாவுடனான உறவை இயல்பாக்க வேண்டும் என டொனால்ட் டிரம்ப் விரும்புகிறார்.

### ஜெலன்ஸ்கியின் திட்டம்

அமெரிக்காவின் இந்த விருப்பங்களுக்கு எதிரானது உக்ரைன் அதிபரின் திட்டம். போரில் ரஷ்யா தோற்கடிக்கப்பட்டு, ஆக்கிரமித்த பகுதிகளில் இருந்து வெளியேற்ற வேண்டும். அதுவரை என்ன விலை கொடுத்தேனும் போரைத் தொடர வேண்டும் என ஜெலன்ஸ்கி விரும்புகிறார். இதனால் ஏற்படும் மனித இழப்புகளையோ பேரழிவுகளையோ பற்றி அவருக்கு கவலையில்லை.

அமெரிக்காவின் நிதியையும் ஆயுதங்களையுமே பெருமளவு சார்ந்திருக்கும் உக்ரைனுக்கு, அவை நிறுத்தப்பட்டால் மரண அடியாக இருக்கும். பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய ஆட்சியாளர்களின் ஆதரவு இருந்தாலும் பற்றாக்குறையை ஈடுசெய்ய முடியாது. இதனால் போரில் இருந்து ஒதுங்காமல் அமெரிக்காவைத் தடுக்க உக்ரைன் நினைக்கிறது.

இந்தச் சூழலில் அரிய வகை கனிமங்களை எடுப்பதற்கான உரிமை தொடர்பாக இருநாட்டு அதிபர்கள் பேச்சு நடத்திய போது ஏற்பட்ட ‘மோதல்’ இருவேறு விருப்பங்களை வெளிப்படுத்துகிறது. இதில், அமெரிக்காவை எப்படியாவது போருக்குள் இழுத்துவிட வேண்டும் என்ற அவசர உணர்வை உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும், மூன்றாம் உலகப் போருக்குள் தள்ளிவிடப் பார்க்கிறார் என்ற எரிச்சலை அமெரிக்க அதிபர் டிரம்ப்பும் வெளிப்படுத்தினர்.

### பேரழிவு நிலையில் உக்ரைன் படைகள்

உக்ரைனில் போர் தொடங்கியதில் இருந்தே பிரதேசங்களையோ, நகரங்களையோ கைப்பற்றுவதைவிட உக்ரைன் படைகளை அழிப்பதே ரஷ்யாவின் உத்தியாக இருக்கிறது என்று போரியல் ஆய்வாளர்கள் கூறினர். தற்போது மீள்வதற்கு சாத்தியமில்லாத பேரழிவு நிலையை உக்ரைன் படைகள் எட்டியிருப்பதாக கூறப்படுகிறது. இதனை உக்ரைன் ஆதரவு ஊடகங்களே வெளிப்படுத்துகின்றன.

இந்த இக்கட்டான நிலையை எட்டுவதற்கு முன்பே ரஷ்யாவுடன் பேச்சு நடத்த உக்ரைன் முன்வந்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளின் ஆதரவு இருப்பதால், போரை நீட்டித்துக்கொண்டே சென்று மீள முடியாத நெருக்கடியில் அதிபர் ஜெலன்ஸ்கி தரப்பு சிக்கிக் கொண்டுள்ளது.

இதனை உணர்ந்துதான் டிரம்ப், ஜெலன்ஸ்கி இடையிலான காரசார விவாதத்துக்குப் பிறகு, ஐரோப்பிய ஆட்சியாளர்கள் ஜெலன்ஸ்கிக்கு ஆதரவைத் தெரிவித்தனர். லண்டனில் நடைபெற்ற மாநாட்டிற்கும் அழைத்து ஆதரவை வெளிப்படுத்தினர்.

எப்படி இருப்பினும், அதிபர் டிரம்ப் கூறியதுபோல், அமெரிக்கா வழங்கிவரும் நிதி மற்றும் ஆயுத உதவிகளை நிறுத்திவிட்டால், உக்ரைன் போரை நடத்துவதற்குத் தேவையான நிதியை வழங்கவோ அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெறுவதால் ஏற்படும் இடைவெளியை நிரப்பவோ ஐரோப்பிய ஆட்சியாளர்களால் முடியாது. அப்படியே வழங்கினாலும் இந்தப் போரின் முடிவை மாற்ற முடியாது. சில மாதங்களுக்குத் தாமதப்படுத்தலாம். அவ்வளவுதான்.

போரைத் தொடர்வதற்கான பெரும் நிதியையும் ஆயுதங்களையும் வழங்குவதாக பொய்யான நம்பிக்கையை தொடர்ந்து ஊட்டி வருவதன் மூலம் ஐரோப்பிய ஆட்சியாளர்கள், உக்ரைனை மேலும் மேலும் படுகுழியில் தள்ளி வருகின்றனர். இவர்களைப் போன்ற ‘நண்பர்கள்’ இருப்பதால், உக்ரைனிய மக்களுக்கு உண்மையில் எதிரிகள் தேவையில்லை. உளுத்துப்போன இந்த வல்லரசுகளுக்கு உக்ரைன் மக்கள் பட்டுமல்ல, உலக நாடுகளின் உழைக்கும் மக்கள் எழுச்சி முடிவுகட்டும்.

**தொடர்புக்கு: 9500001224**



### மேலாதிக்கம் நீடிக்குமா?

“அமெரிக்காவின் மேன்மையை மீண்டும் நிறுவுவோம்” (Make America Great Again) என்ற டொனால்ட் டிரம்ப்பின் திட்டம், எந்த எதிர்ப்புகளும் அற்ற மேலாதிக்கத்தை உலகின் மீது நிறுவுவதாகும். வல்லரசுகளின் முகாம் மீதான அமெரிக்காவின் தலைமையை உறுதி செய்வதற்கான திட்டத்தில் ஒரு பகுதியாகும். வர்த்தகப் பற்றாக்குறை, அதிகரித்துவரும் கடன் சுமை மற்றும் நெருக்கடிகளில் இருந்து மீளுவதற்கான முயற்சிகளில் ஒரு பகுதியாகவும் உள்ளது.

### போர் முடிவுக்கு வருமா?

வல்லரசுகளின் முன்பு இரண்டு வாய்ப்புகள் உள்ளன. ஒன்று, ரஷ்யாவுக்கு எதிராக ஜோ பைடன் கடைப்பிடித்த தாக்குதல் அணுகுமுறை. அது தற்போது முட்டுச் சந்தில் நிற்கிறது. இரண்டாவது, உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வந்து வல்லரசுகளின் மேலாதிக்கத்திற்கு எதிரான கூட்டணியில் ரஷ்யா இடம்பெறாமல் பார்த்துக் கொள்வது. ஐரோப்பிய ஆட்சியாளர்கள் முதல் வாய்ப்பை தேர்வு செய்கின்றனர்.

### காரசார வாக்குவாதம் ஏன்?

அதிபர் டிரம்ப் மற்றும் ஜெலன்ஸ்கி இடையிலான காரசார வாக்குவாதம் என்பது இரண்டு அரசியல் கோமாளிகளுக்கு இடையிலானது அல்ல. இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய உலக ஒழுங்கமைப்பு சிதைவு அடைவதன் வெளிப்பாடாகும். மேற்கத்திய வல்லரசுகளின் கூட்டணி சரிந்து வருவதையும் அதனை சரிப்படுத்த அதிபர் டிரம்ப்பும் ஐரோப்பிய ஆட்சியாளர்களும் எடுக்கும் முயற்சிகளையும் வெளிப்படுத்துகிறது.

### “போருக்கு நாங்களே காரணம்” எலான் மஸ்க் ஒப்புதல்



“உக்ரைன் மீது போர் தொடுத்துப் பார் என்று நான்தான் சவால் விட்டேன். என்னுடைய ‘ஸ்டார் லிங்க்’ அமைப்புதான் உக்ரைன் ராணுவத்தின் முதுகெலும்பு. நான் அதை நிறுத்தினால் உக்ரைனின் முன்னணி போர் வரிசை அனைத்தும் சரிந்துவிடும்” உலகப் பெருமுதலாளியும் அதிபர் டிரம்ப்புக்கு அணுக்கமான நண்பருமான எலான் மஸ்க். ஒரு கார்ப்பரேட் முதலாளி நினைத்தால் இரண்டு நாடுகளிடையே போரை ஏற்படுத்தவும் காலை வாரிவிட்டு நிறுத்தவும் முடியும் என்பதை இந்த ஒப்புதல் வாக்குமூலம் வெளிப்படுத்துகிறது.

# குறைந்தபட்ச ஊதியம் வழங்கக் கோரி தீர்மானம்





அரியலூர் மாவட்டப் பஞ்சாயத்து ஏஐடியுசி தொழிலாளர் சங்கம் சார்பாக அரியலூரில், மாவட்டப் பொதுச்செயலாளர் டி.தண்டபாணி தலைமையில் பேரவைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் துணைத் தலைவர் ஆர்.தனசிங், கு.வனிதா ஆகியோர் முன்னிலையில், தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை சங்கப் பொதுச் செயலாளர் பெ.கிருஷ்ணசாமி சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்டத் தலைவராக ஆர்.தனசிங், செயலாளராக கு.வனிதா, துணைத் தலைவர்களாக ராமசாமி, ஜெயசித்ரா, ரா.பானுமதி, துணைச் செயலாளர்களாக தங்கதுரை, சின்னையன், ஆர்.மருதமுத்து, பொருளாளராக ராசய்யா ஆகிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்

## ஏஐடியூசி மீனவத் தொழிலாளர்கள் சங்கம் வலியுறுத்தல்



தமிழ்நாடு ஏஐடியூசி மீனவத் தொழிலாளர்கள் சங்கத்தின் செங்கல்பட்டு மாவட்ட 4வது ஆண்டு பேரவைக் கூட்டம் க.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது. ஏஐடியூசி மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.ஜஹாங்கீர் துவக்கி வைத்துப் பேசினார். மாநிலச் செயலாளர் வி.ஆதிமூலம், மாநிலக் குழு உறுப்பினர் பி.ரவிச்சந்திரன், ஏஐஓய்எப் மாநிலத் துணைத் தலைவர் மோ. வெங்கடேசன், மீனவர் சங்க மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் என்.ஆனந்த், ஏஐஎஸ்எப் மாவட்டச் செயலாளர் ஜெ.அஜித்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். சங்க மாநிலப் பொதுச் செயலாளர் பி.சின்னத்தம்பி நிறைவுரையாற்றினார். இதில் தலைவராக கொக்கிலமேடு எஸ்.சரவணன், செயலாளராக க.ஜெகதீசன், பொருளாளராக எஸ்.தேவராஜ், துணைத் தலைவர்களாக அ.கனகராஜ். பி.மகாதேவன், துணைச் செயலாளர்களாக ஆர்.குமுதாராஜாராம், எஸ்.வீரராகவன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இலங்கைக் கடற்படையால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கபடுவதைத் தடுக்க ஒன்றிய, மாநில அரசுகள் தலையிட்டு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். மாவட்ட ஆட்சியர் தலைமையில் மீனவர் குறைதீர்க்கும் கூட்டம் நடத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# கோட்டையை நோக்கிப் பேரணி

## கோவில் மனை குடியிருப்போர் சங்கக் கூட்டமைப்பு முடிவு

தமிழ்நாடு கோயில் சார்ந்த மனைகளில் குடியிருப்போர் சங்கங்களின் நிர்வாகிகள் கூட்டம் சென்னை மேற்கு அண்ணா நகர், திருவல்லீஸ்வரர் நகர் நல கழக திருமண மண்டபத்தில் மாநிலத் தலைவர் வி.ஏ.பாலசுப்பிரமணியன், மாநிலப் பொருளாளர் எஸ்.ஏழுமலை தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில், தென் சென்னை, வட சென்னை, மத்திய சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம் மாவட்டங்களைச் சேர்ந்த சங்க நிர்வாகிகள் உள்பட 200 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

◆ கோவில்மனைகளுக்குச் சதுர அடிக் கணக்கில் வாடகையை நிர்ணயிப்பதை ரத்து செய்து, பழையபடி பகுதி முறையை அமல்படுத்த வேண்டும். இதனால் குடியிருப்போரின் உரிமைகள் பாதுகாக்க வேண்டும்.

◆ அத்தியாவசியத் தேவைகளான மின் இணைப்பு, குடிநீர், கழிவு நீர் இணைப்பு பெறுவதற்குத் தடையில்லாச் சான்று பெற வேண்டும் என்றும், கோவில் பெயரிலேயே இணைப்பைப் பெறவேண்டும் என்று வற்புறுத்துவதையும், குடியிருப்போர் பெயரில் உள்ள இணைப்புகளை முன்னறிவிப்பு ஏதுமின்றி அடாவடித்தனமாகக் கோயில் பெயரில் மாற்றுவதையும் உடனடியாகக் கைவிட வேண்டும்.

◆ சொத்து ஆவணங்கள் ஏதுமில்லாமல், கோயிலுக்கு விளக்கு ஏற்றுவதற்காக அளித்த நன்கொடையை வாடகையாகக் கணக்கிட்டு, கிராமநத்தம், நத்தம் புறம்போக்கு, குடிக்காணி, சர்க்கார் புறம்போக்கு, நிலையைப் போன்ற இடங்களுக்குச் சொந்தம் கொண்டாடுவதையும், UDRல் மாற்றம் செய்துள்ளதையும், தவறுதலாகக் கண்டறிந்து, அறநிலயத்துறையின் அத்துமீறலைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் 08.04.2025 செவ்வாய்க்கிழமை கோட்டையை நோக்கிப் பேரணி செல்வது என்று இக்கூட்டம் ஏகமனதாக முடிவு செய்கின்றது.



■ அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் மதுரை புறநகர் சார்பாக இலவச மருத்துவ முகாம்

### திருப்பூர் மேயருடன் பேச்சுவார்த்தையில் உடன்பாடு

# காத்திருப்புப் போராட்டம் ஒத்திவைப்பு



இரண்டாவது மண்டலம் 7 மற்றும் 17வது வார்டு பகுதிகளில் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்கக் கோரி மாநகராட்சி இரண்டாவது மண்டல அலுவலகத்தில் காத்திருப்புப் போராட்டம் நடைபெறும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அறிவிக்கப்பட்டிருந்தது. அறிவிப்பைத் தொடர்ந்து திருப்பூர் மாநகராட்சி மேயர் திரு என்.தினேஷ்குமார் அவர்களது அழைப்பின் பேரில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர், மேயர் அவர்களையும் துணை மேயர் அவர்களையும் திருப்பூர் மாநகராட்சி மைய அலுவலகத்தில் சந்தித்தனர்.

கோரிக்கைகளின் அவசியத்தையும் வலியுறுத்தி உடனடியாக நிறைவேற்றித் தரக் கூறினர். கவனமுடன் கேட்டுக்கொண்டு, சௌடேஸ்வரி அம்மன் கோவில் எதிரில் உள்ள கணபதி நகர் முதல் வீதி இதுவரை ஒர்க் ஆர்டர் வழங்கவில்லை என்றும் அதிகாரபூர்வமாக இன்னும் இரண்டொரு நாளில் ஒர்க் ஆர்டர் வழங்கப்பட்டுத் தார்ச்சாலை பணி துவங்கப்படும் என்றும் சதாசிவம் நகரில் 2வது குறுக்கு வீதியில் உடனடியாக கல்வெர்ட் அமைக்கப்படும் என்றும் சில கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்றுவதாகவும் மற்ற கோரிக்கைகளை முன்னுரிமை கொடுத்து ஒன்றிரண்டு மாதங்களுக்குள் கட்டாயம் நிறைவேற்றித் தரப்படும் என்றும் உறுதியளித்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள காத்திருப்புப் போராட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது. மேயருடன் தொட்டிபாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் எம்.மோகன், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரண்டாவது மண்டலக் குழுச் செயலாளர் வி.எஸ்.சசிகுமார், மண்டல துணைச் செயலாளர் எஸ்.விஜய், போயம்பாளையம் கிளைச் செயலாளர் என்.மகாலிங்கம், துணைச் செயலாளர் மணிகண்டன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற நிர்வாகிகள் பி.தேவராஜ், அன்பரசு மற்றும் பொதுமக்கள் சந்தித்துப் பேசினர்.

# யோகா பயிற்றுநர்களுக்கு மீண்டும் பணி வழங்கிடக் கோரி ஆர்ப்பாட்டம்




பணிநீக்கம் செய்யப்பட்ட 253 யோகா பயிற்றுநர்களுக்கு மீண்டும் பணி வழங்கிட வேண்டும், கடந்த 20 மாதமாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய ஊதிய பாக்கியை உடனடியாக வழங்கிட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, 05.03.2025 அன்று சென்னை அறிஞர் அண்ணா இந்திய மருத்துவமுறை இயக்குநரக வளாகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில், சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, தலைவர் பி.காளிதாசன், சித்த மருத்துவப் பேரியக்கத்தின் தலைவர் டாக்டர் விஜய் விக்கிரமா மற்றும் யோகா பயிற்றுநர் சங்கத் தலைவர் காசிநாத துரை ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சிபிஐ போராட்ட அறிவிப்பால்

# வெண்டையம்பட்டி தனியார் நிறுவனத்தின் இயக்கம் நிறுத்திவைப்பு



தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் தாலுகா, வெண்டையம்பட்டி கிராமத்தில் பிளாஸ்டிக் மறுசுழற்சி செய்யும் சோழா எக்கோ பாலிமர்ஸ் என்ற நிறுவனம் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் விதிகளைப் பின்பற்றாமல் திறந்த வெளியில் பிளாஸ்டிக் பொருட்களைக் கொட்டி மறுசுழற்சி செய்து, கழிவுகளைப் பொதுக்குட்டையில் வெளியேற்றி வருகிறது. இதனை அருந்தி கால்நடைகள் உயிரிழந்துள்ளன. இதனை கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், தொடர் காத்திருப்புப் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை ஒட்டி நடைபெற்ற சமாதானக் கூட்டத்தில் பூதலூர் வட்டாட்சியர் மரிய ஜோசப், காவல் ஆய்வாளர் சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட வருவாய்துறை, காவல்துறை அலுவலர்கள், கட்சியின் தஞ்சாவூர் தெற்கு மாவட்டச் செயலாளர் முத்து.உத்திராபதி, துணைச் செயலாளர் கோ.சக்திவேல், மாவட்டப் பொருளாளர் கோ.பாஸ்கர், விவசாயச் சங்க மாவட்ட தலைவர் இரா.இராமச்சந்திரன், செயலாளர் சோ. பாஸ்கர், ஒன்றியச் செயலாளர் இரா.முகில் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில்,

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய ஆய்வு அறிக்கை வரும் வரை சோழா எக்கோ பாலிமர்ஸ் நிறுவனத்தின் இயக்கம் நிறுத்தி வைக்கப்படும் எனவும், ஆய்வுகள் அடிப்படையில், உயிரிழந்த கால்நடைகளுக்கு இழப்பீடு பெற்றுத்தரப்படும் எனவும், நிறுவனத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நீர்நிலைப் புறம்போக்குகளை மீட்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும், மக்களுக்காகப் போராடும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினர் மீது அவதூறு பரப்பிய நபர்கள் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்து நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் கொடுத்த எழுத்துபூர்வ உத்தரவாதத்தை ஏற்றுத் தொடர் காத்திருப்புப் போராட்டம் ஒத்திவைக்கப்படுகிறது.

# பஞ்சமி நிலங்களைப் பட்டியலின மக்களுக்கு வழங்கிடுக

## தஒவாஇ மதுரை புறநகர் மாவட்டப் பேரவை வலியுறுத்தல்

தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின், மதுரை புறநகர் மாவட்டப் பேரவை, மேலூரில் என்.திலகர் தலைமையில் நடைபெற்றது. பி.பூமிநாதன், பி.மூக்கம்மாள் முன்னிலையில், ஏ.மூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார். கட்சியின் புறநகர் மாவட்டச் செயலாளர் பி.முத்துவேல் பேரவையைத் துவக்கி வைத்தார். தெற்கு மண்டலப் பொறுப்பாளர் மா.பெ.சுகுமாரன் வேலை அறிக்கை முன்வைத்து உரையாற்றினார்.

தேசியக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் கிருஷ்ணன் தேசிய மாநாட்டு முடிவுகளை விளக்கிப் பேசினார். இதில் மாவட்டத் தலைவராக கே.மெய்யர், துணைத் தலைவர்களாக வி.குமரேசன், ஏ.இராஜேந்திரன், என்.திலகர், செயலாளராக ஏ.மூர்த்தி, துணைச் செயலாளர்களாக பி.மூக்கம்மாள், எஸ்.கண்ணன் கே.சையது, பொருளாளராக பி.பூமிநாதன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் பா.காளிதாஸ் நிறைவுரையாற்றினார். மதுரை மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில், பட்டியலின மக்களை அறங்காவலர் குழுவில் சேர்த்திடுக, வேலூர் வட்டம் கீழவளவு அம்பேத்கர் நகரில் வசிக்கும் பட்டியலின மக்களுக்குப் பஞ்சமி தரிசு, புஞ்சை நிலங்களில் குடிமனைப்பட்டா வழங்கிடுக, மேலூர் தாலுகாவில் உள்ள 678 ஏக்கர் பஞ்சமி நிலங்களைப் பட்டியலின மக்களுக்கு வழங்கிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## முறையாகக் குடிதண்ணீர் வழங்கக் கோரி மாதர் சம்மேளனத்தினர் ஆர்ப்பாட்டம்




சேலம் மாநகரத்தில் 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் வருகிறது. மாநகராட்சி மூன்று நாட்களுக்கு ஒரு முறையாவது குடிநீர் விநியோகிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, இந்திய மாதர் தேசிய சம்மேளனத்தின் மாவட்டச் செயலாளர் பா.வளர்மதி பாலதண்டாயுதம் தலைமையில், சேலம் கோட்டைப் பகுதியில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி, மாநிலத் துணைச் செயலாளர் அஸ்வினி குணசேகர், மாவட்டத் தலைவர் எஸ்.பழனியம்மாள் செல்வராஜ், மாவட்டத் துணைச் செயலாளர் எஸ்.கலையரசி சிவக்குமார், இரா.சுகந்திராஜேஷ் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## மூன்று மாத ஊதிய பாக்கியை வழங்கிடக் கோரி விவசாயத் தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி அளிப்புத் திட்ட தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய மூன்று மாதச் சம்பள பாக்கியை வழங்கிட வேண்டும். தமிழ்நாட்டிற்கு, ஒன்றிய அரசு வழங்க வேண்டிய நிதியை உடனே வழங்கிட வேண்டும் என்பதை வலியுறுத்தி, தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் சார்பாக, தாந்தோணி ஒன்றியம், புத்தாம்பூர் ஊராட்சி அலுவலகம் முன்பு பி.பி.சுப்பிரமணி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஆர்.தங்கவேல் கோரிக்கையை விளக்கிப் பேசினார்.

## பட்டா வழங்க அதிகாரிகள் உறுதி சிபிஐ போராட்டம் ஒத்தி வைப்பு



கோவில்பட்டி இலுப்பையூரணி ஊராட்சி மறவர் காலனி, தாமஸ் நகர் பகுதி மக்களுக்கு வீட்டுவரி ரசீது, மின் இணைப்பு, சாலை மற்றும் வாறுகால் வசதி செய்து தர வேண்டும். பட்டா வழங்காத அதிகாரிகளைக் கண்டித்து, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில், கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு கொடுக்கும் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

இது தொடர்பான பேச்சுவார்த்தை வட்டாட்சியர் சரவணபெருமாள் தலைமையில் நடந்தது. இதில் தாமஸ் நகர், மறவர் காலனி பகுதிகள் கால்நடை பராமரிப்புத் துறை என்னும் பெயரில் உள்ளதால், அந்தத் துறையின் ஒப்புதல் பெற்று, மக்களுக்கு இலவசப் பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்று போராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்கப்பட்டது. இதில் கட்சியின் தாலுகா செயலாளர் பாபு மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டனர்.

## அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழக தேசிய நிர்வாகிகள் கூட்டம்

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகத்தின், அகில இந்திய நிர்வாகிகள் கூட்டம், குஜராத் மாநிலம் சூரத் நகரில் மார்ச் 1 மற்றும் 2 ஆகிய தேதிகளில் அமைப்பின் தலைவரும், உலக சமாதான கவுன்சிலின் தலைவருமான பல்லப் சென் குப்தா தலைமையில் நடைபெற்றது. அகில இந்தியப் பொதுச் செயலாளர் ஹர்சந் சிங் வேலை அறிக்கையை முன்வைத்தார்.

அகில இந்திய சமாதான ஒருமைப்பாட்டுக் கழகம் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், இயக்கங்கள், அகில இந்திய மற்றும் உலக அளவிலான அரசியல் நிலைமைகள் குறித்து பல்லப் சென் குப்தா கருத்துகளை முன்வைத்தார். இதில் தமிழ்நாட்டில் இருந்து, அகில இந்தியச் செயலாளர் ஐ.ஆறுமுக நயினார், அகில இந்திய துணைத் தலைவர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் கலந்து ஆகியோர் கொண்டனர்.



அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்டுள்ள கியூபாவிற்குப் பொருளாதார ரீதியாக உதவிட வேண்டும்.

இந்திய வியட்நாம் நட்புறவு பண்பாட்டுக் கலை விழாவை இவ்வாண்டு ஒடிசா மற்றும் ஆந்திரா இணைந்து நடத்திட வேண்டும்.

அணு ஆயுதங்களுக்கு எதிரான ஸ்டாக்கோம் அறிக்கை உலகச் சமாதான கவுன்சிலால் மார்ச் 19, 1950 ல் வெளியிடப்பட்டது. அதன் 75 வது ஆண்டு தினத்தை நாடு முழுவதும் கடை பிடித்திட வேண்டும்.

பாண்டூங் மாநாடு மற்றும் அணிசேரா இயக்கம் தொடங்கப்பட்டதின் 70 ம் ஆண்டு விழாவை, வரும் ஏப்ரல் 18 முதல் 25 வரை நாடு முழுவதும் கொண்டாடிட வேண்டும்.

பாசிசத்தைத் தோற்கடித்த 80 வது ஆண்டு தினத்தை மே 9 அன்று கொண்டாடிட வேண்டும்.

ஐரோப்பிய பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பாக, 1975 ஆகஸ்ட் 1 அன்று ஹெல்சிங்கி இறுதிச் சட்டம் மற்றும் மேற்கத்திய கிழகத்திய நாடுகளிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் 50 வது ஆண்டு விழாவைக் கொண்டாடிட வேண்டும்.

புரட்சியாளர் பிடல் காஸ்ட்ரோ பிறந்த நூற்றாண்டைக் கொண்டாடிட வேண்டும்.

ஹிரோஷிமா நாகஷாஹி மீது அமெரிக்காவால் அணுகுண்டுகள் வீசப்பட்டத்தின் 80 வது ஆண்டு விழாவைக் கடைபிடித்திட வேண்டும்.

ஐக்கிய நாடுகளை சபை 24 அக்டோபர் 1945 ல் தொடங்கப்பட்டதின் 80 வது ஆண்டுவிழாவைக் கொண்டாடிட வேண்டும்.

சீதாராம் எச்சூரியின் நினைவு நாளை நாடு முழுவதும் கடைபிடித்திட வேண்டும். மேற்கண்ட முடிவுகள் இக்கூட்டத்தில் எடுக்கப்பட்டன.

## திருக்கண்ணபுரத்தில் குடிமனைப் பட்டா வழங்க வலியுறுத்தி சிபிஐ ஆர்ப்பாட்டம்




பல தலைமுறைகளாகக் குடியிருக்கும் அனைவருக்கும் குடிமனைப் பட்டா வழங்க வலியுறுத்தி, நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம், திருக்கண்ணபுரம் சௌரிராஜ பெருமாள் கோவில் அருகில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றிய நிர்வாகக் குழு உறுப்பினர் மகேந்திரன், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியப் பொருளாளர் கோவிந்தராஜ் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாவட்டப் பொருளாளர் பாபுஜி, ஒன்றியச் செயலாளர் சந்திரசேகர், விவசாய சங்க ஒன்றியச் செயலாளர் தங்கையன், விவசாயத் தொழிலாளர் சங்க ஒன்றியச் செயலாளர் தமிழரசன், ஒன்றிய துணைச் செயலாளர் ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதில் திருக்கண்ணபுரம், கோட்டூர், ராதாரம்பூர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## ஏஐடியூசி கட்டடச் சங்கம் கொடியேற்று விழா



தருமபுரி மாவட்ட கட்டடத் தொழிலாளர் சங்கம் சார்பில், ஏரியூர் ஒன்றியத்தில் சங்கக் கொடி ஏற்றி, பெயர்ப் பலகைத் திறப்பு விழா, ஏரியூர் பஸ் நிலையம் அருகில் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சி.மணி தலைமையில், சங்கத்தின் மாநிலப் பொதுச் செயலாளர் என்.செல்வராஜ் சங்கக் கொடி ஏற்றி வைத்துப் பேசினார். மாநிலச் செயலாளர் ஆர்.துரைசாமி பெயர் பலகையைத் திறந்து வைத்தார். மாநிலத் துணைச் செயலாளர் எம்.முனுசாமி, ஒருங்கிணைப்பாளர் நந்தினி, மாவட்டத் தலைவர் குழந்தைவேலு, பொருளாளர் விஜயா, துணைத் தலைவர் பாலகிருஷ்ணன், துணைச் செயலாளர் கே.முனுசாமி ஆகியோர் பேசினார்கள். ஏரியூர் ஒன்றியத்தில் உள்ள ஏர்கோல்பட்டி, நல்லூர்காடு, காட்டூர், காமராஜ்பேட்டை, அஜ்ஜனஅள்ளி, முதுகம்பட்டி, சீல்நாய்க்கனூர் உள்ளிட்ட இடங்களில் கொடி ஏற்றிப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்தனர்.

## அகில இந்திய மீனவத் தொழிலாளர் சங்க பொதுச்செயலாளர் ராஜு மறைவுக்கு அஞ்சலி




அகில இந்திய மீனவத் தொழிலாளர் சங்கத்தின், பொதுச்செயலாளர் ராஜு அவர்களின் மறைவையொட்டி, இராமேஸ்வரத்தில் ஏஐடியுசி மீனவத் தொழிலாளர் சங்கத்தின் இராமநாதபுரம் மாவட்டக் குழு சார்பில், அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் சங்கத்தின் மாநிலச் செயலாளர் சி.ஆர்.செந்தில்வேல். மாநிலக் குழு உறுப்பினர் ஆர்.பூமாரி, மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.பிச்சை, எம்.அந்தோணிபீட்டர்,

மாதர் சம்மேளன மாவட்டச் செயலாளர் பி.வடகொரியா, ஏஐஒய்எப் மாவட்டச் செயலாளர் லெ.வெங்கடேசன், ஏஐஒய்எப் நகரச் செயலாளர் வி.கருப்பையா ஏஐடியூசி ஆட்டோ சங்க மாநில துணைச் செயலாளர் பி.ஜீவானந்தம், ஆட்டோ சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஜி.பாண்டி, கட்சியின் சத்தியா நகர் கிளைச் செயலாளர் கே.சேகர் உள்ளிட்ட பல தொழிலாளர் தோழர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## அரசு மருத்துவர்களின் ஓய்வூதியத்தைக் குறைப்பதற்குக் கண்டனம்

### சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம்

ஓய்வு பெற்ற அரசு மருத்துவர்களின் ஓய்வூதியத்தைக் குறைப்பது அப்பட்டமான தொழிலாளர் விரோதப் போக்காகும். இதனை தமிழ்நாடு அரசு கைவிட வேண்டும் என்று, சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

ஓய்வூதியத்தைத் திருத்தியமைத்தல் என்ற பெயரில், ஓய்வு பெற்ற தமிழ்நாடு அரசு மருத்துவர்களின் ஓய்வூதியத்தைக் குறைத்திடும் நடவடிக்கையை தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. அதற்கான சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. இது கண்டனத்திற்குரியது.

கடந்த அஇஅதிமுக அரசு ஓய்வூதியத்தைக் குறைக்க முயன்ற பொழுது, எதிர்கட்சித் தலைவராக இருந்த மு.க.ஸ்டாலின் கண்டன அறிக்கை வெளியிட்டார். ஆனால், இப்பொழுது தி.மு.க அரசு இந்த ஓய்வூதியக் குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டிருப்பது மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் அளிக்கிறது. இது மூத்த மருத்துவர்களின் ஓய்வூதிய உரிமை பறிப்பு இந்த அப்பட்டமான தொழிலாளர் விரோத மருத்துவர்கள் விரோதப் போக்கை தமிழ்நாடு அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் எனச் சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது எனத் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

## மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டுமனை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையீடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கோவை மாவட்டக் குழு சார்பில், மாற்றுத் திறனாளிகளுக்கு வீட்டு மனைகள் வழங்கக் கோரி, கோவை மாவட்ட ஆட்சித் தலைவரை, கட்சியின் மாநிலப் பொருளாளர் எம்.ஆறுமுகம் தலைமையில், கட்சியின் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, கிழக்கு மண்டல அமைப்பு சாரா சங்கச் செயலாளர் எஸ்.ஆறுமுகம் உள்ளிட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனு அளித்தனர். கோரிக்கைகள் குறித்துப் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதி அளித்துள்ளார்.

## உலகத் தாய்மொழி நாள் விழா கருத்தரங்கம்



புதுச்சேரி மாநிலக் கலை இலக்கியப் பெருமன்றமும், சாரதா கங்காதரன் கல்லூரியும் இணைந்து, உலகத் தாய்மொழி நாள் விழா கருத்தரங்கம் கல்லூரி முதல்வர் முனைவர் பாபு தலைமையில் நடைபெற்றது. தமிழ்த் துறை பேராசிரியர் சீனு.தண்டபாணி வரவேற்க, பெருமன்ற பொதுச்செயலாளர் பாலகங்காதரன் நோக்கவுரை ஆற்றினார். தாகூர் கலைக் கல்லூரி பிரெஞ்சுத் துறை பேராசிரியர் முனைவர் ஜென்னி பாலசுப்பிரமணியன் சிறப்புரை வழங்கினார்.

புதுச்சேரி மாநிலத் தலைவர் எல்லை.சிவக்குமார், பெருந்தலைவர் காமராஜர் கலைக் கல்லூரி முனைவர் சவுந்தரவள்ளி வாழ்த்துரை வழங்க, மாணவி சிவஸ்ரீ நன்றியுரை ஆற்றினார். கட்டுரை, கவிதை மற்றும் பேச்சுப் போட்டிகளில் பங்கேற்ற மாணவ மாணவிகளுக்குச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## தன்னம்பிக்கை சிறகுகள் நூல் விமர்சனக் கூட்டம்



தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் தேவகோட்டை கிளை சார்பில், கிளைத் தலைவர் கவிஞர் ச.செல்வராஜ் தலைமையில், செயலாளர் கவிஞர் அ.சந்திரன் வரவேற்க, மாணவி ரா.வள்ளி திருக்குறள் சிந்தனை உரைவீச்சு நிகழ்த்தினார். விருதுநகர் மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் பாராட்டிப் பேசினார். கவிஞர் அப்பச்சி சபாபதி எழுதிய “தன்னம்பிக்கை சிறகுகள்” நூலினை முனைவர் இரா.கீதா விமர்சனம் செய்தார். கவிஞர் அப்பச்சி சபாபதி ஏற்புரை நிகழ்த்தினார். நூல் குறித்து ராதாகிருஷ்ணன் பேசினார். பேராசிரியர் க.வெண்ணிலா நன்றி கூறினார். இதில் மாவட்டச் செயலாளர் முனைவர் கரு.முருகன், பேராசிரியர் கோ.தர்மராஜ், இரா.மேகலா முருகன், ஆசிரியர் ரேவதி நவநீதகிருஷ்ணன், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், கலை இலக்கியப் பெருமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## லட்சுமியம்மாள் மறைவு கே.சுப்பராயன் எம்பி ஆறுதல்



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர், பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் என்.நஞ்சப்பன் அவர்களின் வாழ்விணையர் லட்சுமியம்மாள் கடந்த 17.02.2025 அன்று இயற்கை எய்தினார். இந்நிலையில் கட்சியின் மாநிலக் கட்டுப்பாட்டுக் குழுத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி, ஏஐடியூசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னசாமி என்.நஞ்சப்பன் இல்லத்திற்கு நேரில் வருகை தந்து அஞ்சலி செலுத்தினார். கட்சியின் தருமபுரி மாவட்டச் செயலாளர் எஸ்.கலைச் செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் எம்.மாதேஸ்வரன், மாவட்டப் பொருளாளர் சி.மாதையன், ஒன்றியப் பொறுப்புச் செயலாளர் சதீஸ், முன்னாள் ஒன்றியச் செயலாளர் முனியப்பன் மாவட்டக் குழு உறுப்பினர்கள் எல்.நாகராஜ், சண்முகம், இல.தர்மராஜா உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

## கந்தர்வகோட்டை கிளை கலை இலக்கியப் பெருமன்ற நிர்வாகிகள் தேர்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், கந்தர்வகோட்டை கிளைக் கூட்டம் நடைபெற்றது. இதில் புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் பாலச்சந்திரன் கலந்து கொண்டார். இதில் கிளைத் தலைவராக கவிஞர் மஞ்சை தாசன், செயலராக உ.ஜீவாதாசன், பொருளராக கவிஞர் ஜெயப்பிரகாஷ், துணைத் தலைவராக ஓவியர் அரங்க. கலியபெருமாள், துணைச் செயலராக கோ.சரவணமுத்து ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். ஜெயப்பிரகாஷ் நன்றி கூறினார்.

## மாத ஓய்வூதியம் ரூ.3000 உயர்த்தி வழங்கக் கோரி உடல் உழைப்புத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்








தமிழ்நாடு உடல் உழைப்பு வாரியத்தில் பதிவு செய்துள்ள தொழிலாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.3000 மாக உயர்த்தி வழங்க வேண்டும். கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வழங்குவதைப் போன்று கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம் உள்ளிட்ட நல வாரியப் பலன்களை உயர்த்தி வழங்கப்பட வேண்டும், வீட்டு மனை மற்றும் வீடு கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும், நல வாரியத்தில் பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் நலவாரிய உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கும் ஆன்லைன் பணிகளை நல வாரியமே இலவசமாக ஏற்பாடு செய்ய வேண்டும் தமிழ்நாடு அரசை வலியுறுத்தி ஏஐடியுசி மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**விருதுநகர்:** விருதுநகர் தொழிலாளர் நல வாரியம் முன்பு, ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் முத்துமாரி தலைமையில், சிபிஐ தேசியக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்டச் செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, உள்ளிட்டோர் பேசினார்கள். சிபிஐ பாலமுருகன், பழனிக்குமார், சக்கணன், கோவிந்தன், ஏஐடியுசி சமுத்திரம், நடராஜன், பாண்டியன், முர்த்தி, வேல்ச்சாமி உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** மணப்பாறை பேருந்து நிலையம் முன்பு, சங்கச் செயலாளர் நல்லுசாமி தலைமையில், சங்கத் தலைவர் பழனிச்சாமி, துணைத் தலைவர் ஜனசக்தி உசேன் ஆகியோர் முன்னிலையில் விவசாயிகள் சங்க மாநில துணைச் செயலாளர் இந்திரஜித், போக்குவரத்து ஏஐடியுசி சுப்பிரமணியன், சுந்தர்ராஜ், கட்சியின் நகர துணைச் செயலாளர் திருநாவுக்கரசு, விவசாயிகள் சங்க ஒன்றியச் செயலாளர் ராஜேந்திரன் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

**தஞ்சாவூர்:** தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகில், மாவட்டச் செயலாளர் தி.கோவிந்தராஜன் தலைமையில், மாவட்ட தலைவர் வெ.சேவையா, மாவட்டப் பொருளாளர் பி.சுதா ஆகியோர் முன்னிலையில், ஏஐடியுசி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.சந்திரகுமார் துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் துரை.மதிவாணன், தெரு வியாபாரச் சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.பி.முத்துக்குமரன், மாவட்டப் பொருளாளர் கே.கல்யாணி, ஆட்டோ சங்கம் இரா. செந்தில்நாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**சேலம்:** சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன், மாவட்டச் செயலாளர் ப.பரமசிவம் தலைமையில், மாவட்ட தலைவர் பி.மணி முன்னிலையில், ஏஐடியூசி தேசியக் குழு உறுப்பினர் எம்.முனுசாமி, சிபிஐ மாவட்ட துணைச் செயலாளர் ஏ.கந்தன் மற்றும் எம்.ஷாநவாஸ்கான், பி.பெரியசாமி, ஆர்.பிரகாஷ், ஏ.பழனிசாமி, எம்.சந்திரன், கே.பி.வி.ராஜேஷ், ஜி.வெற்றிவேலு ஆகியோர் கலந்து கொண்டனர்.

### இந்தி, சமஸ்கிருத மொழித் திணிப்பை எதிர்த்து

## இளைஞர் பெருமன்றம் முற்றுகைப் போராட்டம்

தேசியக் கல்விக் கொள்கையில் மும்மொழித் திட்டத்தை ஏற்றுக்கொண்டால்தான் தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய, ஒருங்கிணைந்த கல்வித் திட்டத்திற்கான நிதியை வழங்குவோம், இல்லையென்றால் வழங்க முடியாது என ஆணவமாகப் பேசிவரும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து, தமிழ்நாடு முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில், ஒன்றிய அரசு அலுவலகங்கள் முன்பு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில், முற்றுகைப் போராட்டங்கள் நடைபெற்றன.

- சென்னையில் வடசென்னை மாவட்டச் செயலாளர் சுரேஷ்குமார் தலைமையில், மாநிலச் செயலாளர் க.பாரதி கண்டனவுரையாற்றினார்.
- தேனியில் மாவட்டச் செயலாளர் மணிகண்டன் தலைமையில், மாநிலத் தலைவர் இரா.தமிழ்பெருமாள் கண்டனவுரையாற்றினார்.
- திருப்பத்தூரில் மாவட்டச் செயலாளர் குமரன் தலைமையில், மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் பா.தினேஷ் கண்டனவுரையாற்றினார். கோவையில் மாவட்டச் செயலாளர் மௌ.குணசேகர் தலைமையில், மாவட்டத் தலைவர் கௌதம் குமார் முன்னிலையில் நடைபெற்றது.
- திருப்பூர் புறநகரில் மாவட்டச் செயலாளர் எஸ்.தெய்வசிகாமணி தலைமையில், மாவட்டத் தலைவர் காளீஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.
- திருப்பூர் மாநகரில் மாவட்டச் செயலாளர் ஆ.அரவிந்த்குமார் தலைமையில், மாவட்டத் தலைவர் எஸ்.விஜய் முன்னிலையில் நடைபெற்றது.
- ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் நவீன்குமார் தலைமையிலும், மாவட்டத் தலைவர் ஜி.கல்யாணசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது.
- நாமக்கல்லில் மாவட்டச் செயலாளர் சாதிக் தலைமையில், மாவட்டத் தலைவர் மோகன் முன்னிலையில் நடைபெற்றது.
- கரூரில் மாவட்டச் செயலாளர்.சௌந்தர்ராஜன் தலைமையில் நடைபெற்றது.
- சேலத்தில் மாவட்டச் செயலாளர் இரா.ரமேஷ் தலைமையில், மாவட்டத் தலைவர் கே.பி.வி.ராஜேஸ் முன்னிலையில் நடைபெற்றது.
- கள்ளக்குறிச்சியில் மாவட்டச் செயலாளர் கே.ராமன் தலைமையில், மாவட்டத் தலைவர் எஸ்.விஜய் முன்னிலையில் நடைபெற்றது.
- விழுப்புரத்தில் மாவட்டச் செயலாளர் சந்துரு தலைமையில் நடைபெற்றது.
- கடலூரில் மாவட்டச் செயலாளர் மோகன் தலைமையில் நடைபெற்றது.
- திருவண்ணாமலையில் மாவட்டச் செயலாளர் யுவராஜ் தலைமையில் நடைபெற்றது.
- திருவள்ளூரில் மாவட்டச் செயலாளர் கே.மோகன்பாபு தலைமையில் நடைபெற்றது.
- செங்கல்பட்டில் மாவட்டத் தலைவர் மோ.வெங்கடேசன் தலைமையில், மாவட்டச் செயலாளர் எம்.அசோக்குமார் முன்னிலையில் நடைபெற்றது.
- மயிலாடுதுறையில் மாவட்டச் செயலாளர் ஜான்சன் தலைமையில் நடைபெற்றது.
- திருச்சி புறநகரில் மாவட்டச் செயலாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்றது.
- திருச்சி மாநகரில் எம்.செல்வக்குமார் தலைமையில் நடைபெற்றது.
- மதுரை புறநகரில் மாவட்டச் செயலாளர் கே.கிருஷ்பாக்கியம் தலைமையில், மாவட்டத் தலைவர் சேதுபாண்டி முன்னிலையில் நடைபெற்றது.
- விருதுநகரில் மாவட்டச் செயலாளர் லி.பகத்சிங் தலைமையில், மாவட்டத் தலைவர் டிமிட்ரோ முன்னிலையில் நடைபெற்றது..
- தென்காசியில் மாவட்டச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் மாவட்டத் தலைவர் சிங்கராஜ் முன்னிலையில் நடைபெற்றது.
- நெல்லையில் மாவட்டச் செயலாளர் சுரேஷ் தலைமையில், மாவட்டத் தலைவர் முத்துக்கிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது.
- புதுக்கோட்டையில் மாவட்டச் செயலாளர் மாரிமுத்து தலைமையில், மாவட்டத் தலைவர் விஜய் முன்னிலையில் நடைபெற்றது.
- தஞ்சை தெற்கில் மாவட்டச் செயலாளர் ச.சுதந்திரபாரதி தலைமையில் மாவட்டத் தலைவர் கார்ல்மார்க்ஸ் முன்னிலையில் நடைபெற்றது.
- தஞ்சை வடக்கில் மாவட்டச் செயலாளர் மாதாமணி தலைமையில் நடைபெற்றது.
- நீலகிரியில் மாவட்டத் தலைவர் ரீனா தலைமையில், மாவட்டச் செயலாளர் கிஷோர் முன்னிலையில், மாநிலத் துணைச் செயலாளர் கலை.அஸ்வினி கண்டனவுரையாற்றினார்.
- தூத்துக்குடியில் மாவட்டச் செயலாளர் சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. மாநிலத் துணைத் தலைவர் அ.ரஞ்சனி கண்ணம்மா கண்டனவுரையாற்றினார்.
- தருமபுரியில் மாவட்டச் செயலாளர் நவீன்குமார் தலைமையில், மாவட்டத் தலைவர் வெங்கேடேசன் முன்னிலையில் நடைபெற்றது.
- சிவகங்கையில் மாவட்டச் செயலாளர் ராகவன் தலைமையிலும் நடைபெற்றது.

# தகவல் தொழில்நுட்பப் பிரிவு காலத்தின் கட்டாயம்!



க.இப்ராகிம்





**இன்றைய நவீனத் தொழில்நுட்ப உலகத்தில் தகவல் தொழில்நுட்பப் பிரிவு அரசியல் கட்சிகளுக்குக் கிடைத்த மாபெரும் ஆற்றலாகப் பார்க்கப்படுகிறது.**

கட்சியின் கொள்கை, திட்டங்கள் மற்றும் செய்திகளை விரைவாக மக்களிடம் எடுத்துச் செல்ல, எதிர்க் கருத்துகளுக்குப் பதிலளிக்க, தேர்தல் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்த, தகவல்களைச் சேகரித்து ஒருங்கிணைக்க, வாக்காளர்களோடு தொடர்பு, கட்சியின் அதிகாரப்பூர்வ இணையதளங்களைப் பராமரித்தல், இளைஞர்களை ஈர்க்கும் கருவி, மக்களைப் பற்றிய ஆழமான புரிதல் மற்றும் பகுதிகளுக்கு ஏற்ப பிரத்தியேகமான செயல்பாடுகளை முன்னிறுத்துதல், எதிர் அணியினரின் பலம் பலவீனத்தைப் பற்றிக் கணித்தல் போன்ற பல்வேறு விதமான பணிகளுக்குத் தகவல் தொழில்நுட்பக் குழு முக்கிய ஒன்றாகப் பார்க்கப்படுகிறது.

அதேசமயம் அறிவியலுக்கு ஒப்பாத பிற்போக்குக் கருத்தியலின் பிறப்பிடமான ஆர்.எஸ்.எஸ் பாஜக போன்ற பிற்போக்குவாதக் கட்சிகள் அறிவியல் தொழில்நுட்பத்தைக் கையாளுவதிலும், அதைப்பயன்படுத்துவதிலும் முன்னணியில் உள்ளது. தயக்கமின்றி எந்தவிதப் பொய்களையும் செய்திகளாக மக்களிடம் கொண்டு சென்று அதன்மூலம் ஆதாயம் அடைந்து வருகிறது பாஜக. 2014 ஆம் ஆண்டு தேர்தலில் உலகின் பிற நாடுகளில் பிரம்மாண்டமாகக் காட்சியளித்த சாலைகள் மற்றும் பாலங்களின் புகைப்படங்களை குஜராத்தில் உள்ளவை என்று கூறி பொய்ப் பிரச்சாரம் செய்தனர். மேலும் சமூக வலைதளங்களில் மாற்றிக் கொள்கை உடையோரின் செய்தி வரும் போது எதிர்மறைக் கருத்துகள் பதிவு செய்யவும், அதோடு அவதூறுகளையும், அருவருக்கத்தக்க வார்த்தைகளையும் பயன்படுத்தித் தங்களின் கேவலமான தாகங்களைத் தணித்துக் கொள்கின்றனர். அதேசமயம் இவ்வாறு செயல்படும் சமூக வலைதளக் கணக்குகளில் 90 சதவீதம் போலிக் கணக்குகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இது மட்டும் தானா என்றால் மாட்டுக்கறி வைத்திருந்ததாகத் தவறான தகவலைக் கூறி மொஹமத் அக்லாக் உள்ளிட்ட பலரைக் கொன்று குவித்தனர். இப்படி போலிச் செய்திகளை வலைதளங்களில் பரப்பி வடமாநிலங்களில் நடைபெற்ற அட்டூழியங்கள் எத்தனை.

மற்றொருபுறம் களத்திற்கே வராதவர்கள், களத்தில் வேடிக்கை கூட பார்த்திராதவர்கள் எல்லாம் சமூக ஊடகத்தில் கூலிக்கு ஆட்களைப் போட்டு கூவிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் சமூக வலைதளத்தில் பிரம்மாண்ட பிம்பத்தைக் கட்டமைத்துத் தாங்களை உத்தமர்கள் என்றும், தாங்கள்தான் அனைத்திற்குமான தீர்வு என்றும் இஷ்டத்திற்குக் கதை விட்டு, மேடைக்கு மேடை மாற்றிப் பேசி அருவருக்கத்தக்க அரசியலின் உதாரணங்களாக மாறியிருக்கின்றனர். மாதத்திற்கு ஒரு கூட்டத்தைக் கூட்டுவது, அதற்கு 10 மாவட்டங்களில் இருந்து நபர்களை இறக்குவது, திரும்பும் திசையில் எல்லாம் கேமராக்களை வைத்துக்கொண்டு கத்துவது, அதைக் காட்சிப்படுத்துவது, இதைத் தாண்டி அவர்கள் என்ன சாதித்தார்கள், யாருக்காக இருக்கிறார்கள் என்றால் கேள்விக்குறியே..?

இந்நிலையில்தான் சமூக வலைதளங்களின் வளர்ச்சி பல்வேறு விதமான அவதூறுகளுக்கும், பொய்ச் செய்திகளுக்கும் வாய்ப்பாகி மக்களின் அமைதியைச் சீர்குலைத்து விடாமல் இருப்பதை உறுதி செய்ய தமிழ்நாடு அரசு தகவல் சரிபார்ப்பகம் என்ற புதிய பிரிவு ஏற்படுத்திச் செயல்படுத்தி வருகிறது. இப்படி அரசாங்கங்களுக்கே சமூக வலைதளங்கள் சவாலானதாக மாறியிருக்கிறது.

## தகவல் தொழில்நுட்ப பிரிவு ஏன் தேவை?

அதிவிரைவுப்பயணத்தைமேற்கொண்டு இருக்கக் கூடிய உலகமயச் சூழலில் இன்றைய மக்களிடம் வாசிக்கும் பழக்கம் குறைந்து வருகிறது. கருத்துகளை ஆய்வு செய்வது, ஆலோசிப்பது, கருத்துக் கேட்பது, மாற்றுக்கருத்தை முன்வைப்பது, கேள்வி எழுப்புவது என்ற செயல்பாடுகள் எல்லாம் குறைந்து கேட்பதும், பார்ப்பதும் மட்டுமே செய்திகளாகவும், தகவல்களாகவும் மட்டுமல்லாமல் கருதப்பட்டு வருகிறது. இந்நிலையில் மக்களை குறிப்பாக இளம் தலைமுறையினரைப் பயிற்றுவிக்க, அறம் சார்ந்த கருத்துகளை அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப அவர்களிடம் கொண்டு செல்ல வேண்டிய செயல்பாட்டின் வெளிப்பாடே தகவல் தொழில்நுட்பக் குழு.

## தகவல் தொழில்நுட்பக் குழுவின் முக்கியத்துவம்!

இன்று செய்திகளை டிவி, ரேடியோ, பேப்பர், புத்தகம் வழியாகத் தெரிந்து கொள்பவர்களைக் காட்டிலும் 70 சதவீதம் நபர்கள் பல்வேறு வகையான சமூக வலைதளங்கள் மூலமாகவே செய்திகளை அன்றாடம் தெரிந்துகொள்ள முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மேலும் 18 வயது முதல் 25 வயது வரை உள்ள 99.99 சதவீதம் பேர் முழுக்க முழுக்கச் சமூக வலைதளப் பயன்பாட்டாளர்களாக மாறியிருக்கின்றனர். இப்படி மிகப் பெரும்பான்மையான மக்களின் பயன்பாட்டுப் பொருளாக மாறி உள்ளது சமூக வலைதளங்கள், இவ்வற்றைக் கையாள வேண்டிய தேவையும் கடமையும் அதிகரித்துள்ளது.

அரசியல் கட்சிகளில் பல்வேறு விதமான அணிகள் செயல்பட்டு வந்தாலும், தகவல் தொழில்நுட்பக் குழு தற்போது அதிக முக்கியத்துவம் பெற காரணம் அதனுடைய பணிகளும், அவை மக்கள் மத்தியில் ஏற்படுத்தும் தாக்கங்களும்தான்.

## இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு இரண்டு நாள் பயிற்சி பட்டறை ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையத்தில் அமைந்துள்ள சி.எஸ். சுப்பிரமணியன் அரங்கத்தில் நடைபெற்றது. இதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் தொடங்கி வைத்தார். தகவல் தொழில்நுட்ப பிரிவின் பொறுப்பாளர் டி.எம்.மூர்த்தி வழிநடத்தினார். கூட்டத்தில் அகில இந்திய கட்சி தகவல் தொழில்நுட்ப பிரிவு குழுவின் பொறுப்பாளர் கபில் சுராவரம், ஹரிஷ் பாலா, நிவேதிதா கபில், ஆகியோர் கலந்து கொண்டு வகுப்பு எடுத்தனர். தகவல் தொழில்நுட்பக் குழுவின் பணிகள் என்ன, அவற்றை கையாளும் முறைகள், சமூக ஊடகத்தில் உள்ள நிறைகுறைகள், பயனுள்ள இணைய உள்ளடக்கத்தை உருவாக்குதல், வடிவமைப்புகளை உருவாக்குதல், தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் காட்சிப் படங்களுடன் விளக்கி அவற்றை செயல் வடிவில் நிறைவேற்று, அவற்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை நிகழ்த்தி காட்டினர்.

மேலும் வகுப்பை எதார்த்தமாகவும், அதே நேரம் கருத்துக்களை கொண்டு செல்வதில் சமரசம் செய்யாமலும் கற்பித்தனர். இப்படி ஒவ்வொரு வகுப்பின் பயன், அதன் முடிவு உடனுக்குடன் தெரிந்து கொள்ள முடிந்தது. இவ்வாறு வகுப்புகள் நேரம் காலம் பார்க்காமல் இரவு வரையும் தொடர்ந்தது. இது வகுப்பின் நேர்த்தியையும், தகவல் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்தை காட்டின. வகுப்பில் வ.மணிமாறன், எம்.ஆர்.ஆதவன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு வகுப்பு எடுத்தனர். இறுதியாக ஒருங்கிணைப்பாளர் க.இப்ராகிம் நன்றி கூறினார்.



# இந்திய மாதர் தேசிய சம்மேளனம் சார்பில் மார்ச் 8 சர்வதேச மகளிர் தின விழா


வேலூர்


வடசென்னை


தென் சென்னை


திருவாரூர்


திருப்பூர் புறநகர்


தேனி


காரைக்குடி

● சென்னை விமான நிலையத் தூய்மைப் பணியாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் சங்கத்தின் சார்பில், சங்கத்தின் துணைத் தலைவர் எச்.தவப்புதல்வி தலைமையில், ஏஐடியுசி தேசியத் துணைத் தலைவர் கே.சுப்பராயன் எம்.பி, தேசியச் செயலாளர் வகிதா நிஜாம், மாதர் சம்மேளன தேசியச் செயலாளர் மருத்துவர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி சீருடை வழங்கினார். ஏஐடியுசி மாநிலச் செயலாளர் கே.இரவி, மாவட்டப் பொதுச் செயலாளர் எம்.ஜகாங்கீர், மாநிலப் பொருளாளர் பி.பீட்டர், பொதுத் தொழிலாளர் சங்கத் துணைப் பொதுச் செயலாளர் ஆர்.துரைசாமி ஆகியோர் கலந்து கொண்டனர். பல்வேறு விளையாட்டுப் போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுப் பரிசு வழங்கப்பட்டது.

● உலக மகளிர் தினத்தை முன்னிட்டு, வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில், கால்பந்தாட்டப் போட்டி மாவட்டச் செயலாளர் த.செண்பகம் தலைமையில் நடைபெற்றது. போட்டியை எம்.ஜெகதீஷ் ஒருங்கிணைத்தார். சிபிஐ மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன், வடசென்னை மாவட்டச் செயலாளர் த.கு.வெங்கடேஷ் வேம்புலி, வடசென்னை மாவட்ட துணைச் செயலாளர் ஜீ.சுப்ரமணி, மதிமுக மாவட்டச் செயலாளர் சு.ஜீவன் எம்சி, காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஜெ.டில்லிபாபு எம்சி, பெரம்பூர் பகுதிச் செயலாளர் இரா.கோட்டி சுரேஷ், மாதர் சங்க மாவட்டப் பொருளாளர் டானியா, மாவட்ட துணைத் தலைவர் அ.சரவணகுமாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

● வேலூரில் மாவட்டச் செயலாளர் காவேரி தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாநிலத் துணைத் தலைவர் டி.லதா எக்ஸ் எம்எல்ஏ, அகில இந்திய துணைச் செயலாளர் ஆனி ராஜா, மாநிலச் செயலாளர் மு.கண்ணகி ஆகியோர் கலந்து கொண்டனர்.

● திருவாரூரில் மாவட்டச் செயலாளர் ஆர். சுலோச்சனா, மாநில துணைச் செயலாளர் கே.சுஜாதா, அகில இந்தியச் செயலாளர் பி.பத்மாவதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

● மத்திய சென்னை வில்லிவாக்கம் பகுதியில் மாவட்ட செயலாளர் தனலெட்சுமி தலைமையில், அம்பத்தூர் பகுதியில் மாவட்ட தலைவர் மாணிக்கவள்ளி நாச்சியப்பன் தலைமையில் மாநிலச் செயலாளர் மு.கண்ணகி கலந்து கொண்டனர். துறைமுகம் பகுதியில் மாவட்டப் பொருளாளர் மஞ்சு தலைமையில் நடைபெற்றது.

● திருப்பூர் புறநகர் மாவட்ட தலைவர் சித்ரா தலைமையில், மாநில துணைச் செயலாளர் நதியா கலந்து கொண்டார். பொது வெளியில் பெண்களை அநாகரிகமாக இழிவுபடுத்திப் பேசும் சீமானைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

● கோவையில் மாவட்டச் செயலாளர் பேபி தலைமையில், மாநகர கவுன்சிலர் சாந்தி சந்திரன் கலந்து கொண்டனர்.

● தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் விஜயலெட்சுமி தலைமையில், மாநிலக் குழு உறுப்பினர் கண்ணகி கலந்து கொண்டனர்.

● தஞ்சை வடக்கு மாவட்டச் செயலாளர் சரண்யா தலைமையில் நடைபெற்றது.

● மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் பி.இராஜலெட்சுமி தலைமையில் நடைபெற்றது.

● சிவகங்கை மாவட்டச் செயலாளர் பா.பாண்டிமீனாள் தலைமையில், மாநிலத் துணைத் தலைவர் இராஜலெட்சுமி கலந்து கொண்டனர்.

● அரியலூர் மாவட்டச் செயலாளர் ராணி தலைமையில் நடைபெற்றது.

● குமரி மாவட்டச் செயலாளர் செல்வராணி தலைமையில் நடைபெற்றது.

● கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் லட்சுமி தலைமையில் நடைபெற்றது.

● திருச்சி மாநகர் மாவட்ட தலைவர் பார்வதி தலைமையில், மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் அஞ்சுகம் கலந்து கொண்டார்.

● திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் சாந்தி கலந்து கொண்டார்.

● தென்சென்னையில் பத்மாவதி, சிவகங்கையில் மீனாள் சேதுராமன், கள்ளக்குறிச்சி மாவட்டச் செயலாளர் ரீத்தா தலைமையில் நடைபெற்றது.

● புதுக்கோட்டை அறந்தாங்கியில் மாநிலக் குழு உறுப்பினர் கோமதி தலைமையில் நடைபெற்றது.


## செவ்வணக்கம் தோழர்



AITUC

**தோழர் K.G. ஜெகநாதன்** வயது - 72

முன்னாள் AITUC கோவை மாவட்ட பொதுச் செயலாளர் **தோழர் K.G.ஜெகநாதன்** அவர்கள் (06.03.2025) அன்று இயற்கை எய்தினார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**திரு.M.D.மோகன்** 53-வது, மாமன்ற உறுப்பினர், மாமன்ற குழுச் செயலாளர்
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**திரு.V.குணசேகரன் CPI,** நரசிம்மநாயக்கன்பாளையம்
**திரு.G.குணசேகரன்** பெத்தநாயக்கனூர்

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
கோவை, கிழக்கு.

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Regd. No. TN / CH (C) / 551 / 2024-2026 Posted on Every Friday & Saturday at Egmore RMS 1 / Patrika Channel.
Day of Publication: Every Thursday WPP NO: TN / PMG (CCR) /WPP/596/ 2024-2026 Registered with Press Registrar General of India, Under Regd No: 1222/57

◆வீடில்லாதவர்களுக்கு 3 செண்ட் நிலம்

◆பல ஆண்டுகளாகக் குடியிருந்து வருவோர்க்கு வீட்டுமனைப்பட்டா

◆புறம்போக்கு நிலத்தில் சாகுபடி செய்பவர்களுக்குப் பட்டா

# தேன்கனிக்கோட்டையில் சிபிஐ காத்திருப்புப் போராட்டம்




பல்லாயிரக்கணக்கானோர் அணிதிரண்டனர்

பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் முன்பு காத்திருப்புப் போராட்டம் மார்ச் 10 அன்று தளி சட்டமன்ற உறுப்பினர் தி.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பல்லாயிரக்கணக்கானோர் அணிதிரண்டதால் தேன்கனிக்கோட்டை டூ ஓசூர் சாலை முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சி கொடிகளுடன் சிவப்பு மயமாகக் காட்சியளித்தது. திரும்பிய பக்கமெல்லாம் மக்கள் அணிதிரண்டு வந்து கொண்டே இருந்தார்கள்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் துணைச்செயலாளர் மு.வீரபாண்டியன், மாநிலச் செயற்குழு உறுப்பினர் எம்.ரவி, மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எம்.லகுமய்யா உள்ளிட்ட மாவட்டப் பொறுப்பாளர்கள் பங்கேற்றனர். பின்னர் வட்டாட்சியர் அவர்களிடம் நிலம் மற்றும் பட்டா கேட்டுப் பல்லாயிரக்கணக்கான மனுக்கள் அளிக்கப்பட்டன. உடனடியாகப் பட்டா வழங்கவில்லையென்றால் அடுத்தகட்ட போராட்டம் குறித்தும் திட்டமிடப்பட்டு வருகிறது. இதே போன்று மாவட்டம் முழுவதும் போரட்டத்திற்கு தயாராகி வருகின்றனர்.












Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.